பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00




# வலம்புரி

The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆடி 21 புதன்கிழமை (06.08.2003) தொலைபேசி - 2223378 ஒலி 230

# இடைக்கால சபையை எதிர்த்து 1500 விகாரைகள் மூலம் துண்டுப் பிரசுரம் விநியோகம்

## தென்னிலங்கையில் பாதுகாப்புத் தீவிரம்

(நமது நிருபர்)

**அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளித்துள்ள இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைவு 'தமிழீழ இராச்சியம்' ஒன்றை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமைந்து விடும் என்ற கோஷத்தை முன்வைத்து தேசிய பிக்குமார் சம்மேளனம் துண்டுப் பிரசுர விநியோகம் ஒன்றை புறக்கோட்டையில் நேற்று ஆரம்பித்துள்ளது. இதனையடுத்து கொழும்பில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தேக்க நிலை அடைந்துள்ள சமாதான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் கடந்த மாதம் 17-ம் திகதி வடக்குக் கிழக்கிற்கான உத்தேச இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைபை விடுதலைப் புலிகளிடம் கையளித்திருந்தது.

விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத்திட்ட வரைபு தமிழீழ இராச்சியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு உந்துசக்தியாக அமைந்து விடும் என்ற கோஷத்தை முன் வைத்து மாபெரும் மக்கள் எதிர்ப்பலையை உருவாக்கும் நோக்குடன் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் எதிர்ப்பு இயக்கத்தை தேசிய பிக்குமார் சம்மேளனம் நேற்றுப் புறக்கோட்டையில் ஆரம்பித்தது.

புறக்கோட்டையில் நேற்று ஆரம்

(10ம் பக்கம் பார்க்க)

## ஆசிரியரின் அதிகூடிய சம்பளம் 21 ஆயிரத்து 300 ரூபா

### சம்பள ஆணைக்குழு பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் சம்பளத் திட்டத்தை ஆராயவென கடந்த 2000 ஆம் நியமிக்கப்பட்ட திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

இச் சம்பள அறிக்கையின்படி, ஆசிரியர் ஒருவரின் அதிகுறைந்த மாதச் சம்பளம் 7 ஆயிரத்து 315 ரூபாவாகவும், அதிகூடிய மாதச் சம்பளம் 21 ஆயிரத்து 300 ரூபாவாகவும் இருக்க வேண்டும்.

அதிபர் ஒருவரின் அதிகுறைந்த மாதச் சம்பளம் 9 ஆயிரத்து 865 ரூபாவாகவும் அதிகூடிய மாதச் சம்பளம் 32 ஆயிரத்து 250 ரூபாவாகவும் இருக்க வேண்டும் என பரிந்துரை

(10ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட 16 மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரியில் அனுமதி வழங்க நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

க.பொ.த உயர் தரப் பரீட்சையில் தோற்றி 'சற்' புள்ளி முறையினால் மருத்துவக் கல்லூரிக்கான அனுமதி வாய்ப்பை இழந்த 16 மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

'சற்' புள்ளியிடல் காரணமாக தம்மால் மருத்துவக் கல்லூரியில் அனுமதி பெறமுடியவில்லை என 16 மாணவர்களும் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

அம் மனுவில் பிரதிவாதிகளாக பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு, அமைச்சரவை உறுப்பினர்கள் உட்பட 42 பேர் குறிப்பிடப் பட்டிருந்தனர்.

இம் மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர்

(10ம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சர் இலங்கைக்கு இராஜீக விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யத்வந்சிங் எதிர்வரும் 18-ம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கான உத்தியோக பூர்வ விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார். கொழும்பில் தங்கி இருக்கும் காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ உட்பட பல முக்கிய பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இவரின் இவ்விஜயம் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமையும் என பலரும் எதிர்பார்க்கின்றனர். (தி)

## ஜப்பான் பிரதிநிதிகள் புலிகளுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

ஜப்பானிய அரசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழு விடுதலைப் புலிகளின் துணை அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளது.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் வன்னிப்பிரதேசத்தில் இடம் பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் எதிர்கால வேலைத் திட்டங்கள் குறித்தும் இச் சந்திப்பில் ஆராயப்பட்டது. (இ)

## அரசு சமாதான முயற்சியில் இதய சுத்தியுடன் செயற்படுகிறது

### கருத்துக் கணிப்பின் முடிவு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வில் ஐக்கிய தேசிய முன்னணி அரசு இதய சுத்தியுடன் செயற்படுவதாக கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் ஏற்பாடு செய்துள்ள கருத்துக் கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 53 சதவீதமானோர் இனப் பிரச்சினைத் தீர்வில் இலங்கை அரசு இதய சுத்தியுடன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

மூவினத்தைச் சேர்ந்த சுமார் 1500 பேர் கலந்து கொண்ட இக் கருத்துக் கணிப்பில் 50.6வீத சிங்களவர்களும், 70 சதவீத தமிழ் மக்களும் 66.3 சதவீத முஸ்லிம்களும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கடந்த மார்ச் மாதம் எடுத்த கருத்துக் கணிப்புக்களுடன் இதனை ஒப்பிடும் போது 5 சதவீத ஆதரவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 20 ஆண்டுகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்பட வேண்டும் என்று 81.4 வீதமானோர் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் பரிதாப மரணம்

(ஏழாலை)

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் மரணமாகியுள்ளார்.

இச் சம்பவத்தில் மானிப்பாயில் உள்ள பேக்கரி ஒன்றின் உரிமையாளரான ஏழாலை மத்தியைச் சேர்ந்த மகாலிங்கம் மகேஸ்வரன் (வயது 27) என்பவரே மரணமானவராவார்.

இவர் தனது பேக்கரியில் இருந்து மோட்டார் சைக்கிளில் பொருட்கள் சிலவற்றை ஏற்றிக் கொண்டு தனது வீடு நோக்கி வந்து கொண்டிருந்த சமயம் உடுவில் பகுதியில் வாகனம் ஒன்றுடன் இடம் பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு யாழ்.போதான வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் நேற்று மரணமானார்.

அவரது சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-12,7,5)

## ஐ. தே. மு. அரசின் அறிவிப்பை பொ. ஐ. மு. ஏற்றுக்கொண்டது

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றியமைப்பது சம்பந்தமான பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட தலைமைத்துவப் பதவியை ஏற்றுக் கொள்வதென பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இப் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்குவதென அறிவித்திருந்தது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இத் தலைமைத்துவப் பதவியை ஏற்றுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இக் குழுவின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கும் நிறைவேற்றுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்படும் அரசாங்கத்தின் யோசனையை வரவேற்றுள்ளதுடன், இதன் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வல்லமை கிடைத்துள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி அன்று முதல் இன்று வரை பாடுபட்டு வருகிறது. சமாதான பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி கருத்தொற்றுமை கொண்டுள்ளார்.

இத் தலைமைத்துவப் பதவி பிரதான எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட்டதை ஏனைய எதிர்க்கட்சிகள் வரவேற்றுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## இலங்கைத் தமிழரைத் திருப்பியனுப்பும் முயற்சியை எதிர்த்து

# பிரி. உள்துறை அமைச்சுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதற்கு அந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டித்து ,பிரிட்டிஷ் உள்துறை அமைச்சுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இவ்வாறு அரசியல் தஞ்சம் கோருபவர்களைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகளை ஆட்சேபித்து அவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும் பிரித்தானிய அமைப்பைச் சேர்ந்த ரொனி பீற்றர்சன் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வற்கான ஆதாரங்களைத் திரட்டுவதற்காக தற்போது இலங்கை வந்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும். அரசுக்கும் இடையில் தற்போது நிலவி வரும் அசாதாரண சூழலில் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கைத் தமிழர்களை இங்கு திருப்பி அனுப்புவதற்குரிய சூழ்நிலை தற்போது இல்லையென்பதை ஆராய்ந்து அதற்கான ஆதாரங்களைத் திரட்டவே ரொனி பீற்றர்சன் இலங்கை வந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து தமிழ்த் தேசியகூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்தவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அர்சியல் கைதிகள் ஆகியோரைச் சந்தித்து இவர் விரிவாக கலந்துரையாடவுள்ளார்.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சுக்கு எதிரான ஆதாரங்களை திரட்டியதும் உடனடியாக பிரிட்டன் சென்று அங்கு உள்துறை அமைச்சுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கில் 4ம்திருவிழாவான இன்று, கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (உ)

## நூல் கொள்வனவு

(கல்வயல்)

தென்மராட்சி கிழக்கிலுள்ள விடத்தற்பளை ஸ்ரீ கணேசா சன சமூக நிலையத்திற்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.ஜி. கஜேந்திரகுமார் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 5 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்நிதியைப் பயன்படுத்தி பல்துறை சார்ந்த நூல்கள் பல கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.(உ-111)

## நெடுங்குளம் பகுதியில் மிதிவெடி மீட்பு நடவடிக்கை தாமதம்

(யாழ்ப்பாணம்)

ஒழுங்கீனமான மிதிவெடி புதைப்புக் காரணமாக அரியாலை நெடுங்குளம் பகுதியில் மிதிவெடி மீட்பு நடவடிக்கைகள் தாமதமடைந்திருப்பதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி பகுதியில் ஹலோட்ரஸ்ட் நிறுவனத்தினர் மிதிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை மனித எச்சங்களின் அடிப்படையில் அப்பகுதியில் 3மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்ற [illegible]புறவு ஏற்பட்டதும் இதனையடுத்[illegible] சம்பந்தப்பட்ட இடத்திற்கு [illegible]சென்ற யாழ்.மாவட்ட நீதிபதி [illegible] மிதிவெடிகளை விரைவாக அகற்றி மனிதப் புதைகுழிகளை தோண்டுவதற்கு வழிவகை செய்யுமாறு உத்தரவிட்டிருந்ததும் தெரிந்ததே.

இதேவேளை, இந்தப்பகுதியில் படையினர், மற்றும் புலிகளின் போர் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்ற காரணத்தினால் மிதிவெடிகள் புதைக்கப்பட்டமை தொடர்பான சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதன் காரணமாக தமது நடவடிக்கைகளை துரிதமாகச் செய்ய முடியாதிருப்பதாகவும், இதனால் தாம் பல சிரமங்களை எதிர்கொண்டிருப்பதாகவும் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்தனர்.(உ-4)

## சுதேச மருத்துவ அபிவிருத்தி கருதி தேசியக்கொள்கை வகுக்க குழு அமைப்பு

(கொழும்பு)

தேசிய வைத்திய இடர் நிவாரண அமைச்சர் சரத்சந்திர ராஜகருணா சுதேச மருத்துவத்தை அபிவிருத்தியடையச் செய்வற்கும் அதற்கான ஒரு தேசிய சுகாதார கொள்கையை வகுப்பதற்கும், ஏனைய சிபார்சுகளைச் செய்வதற்குமாக ஒரு குழுவை நியமித்துள்ளார். பி.ஜே.புஞ்சிஹேவா இக்குழுவின் தலைவராகவும், பேராசிரியர் ரியூலி, த. சில்வா, பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி, ஆயுர்வேத வைத்தியர் ஜே. டி. கருணதாச, ஆயுர்வேத வைத்தியர் கே.சாயக்கார, யூனானி வைத்தியர் பி.எம்.நஜீப், கலாநிதி தேவப்பிரிய நுகவெல ஆகியோர் அங்கத்தவர்களாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயலாளராக எஸ்.எம். குணதாச நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதேச வைத்திய முறையையும், அதன் அபிவிருத்தியையும் முன்னேற்றமடையச் செய்வதற்கான தேசிய சுகாதார கொள்கை ஒன்றை உருவாக்குதல்.

தேசிய மருத்துவ முறைகளான [illegible] தாகும்.

I. சுதேச மருத்துவ சிகிச்சை முறைகளை பாதுகாத்தலும் மேலும் முன்னேற்றமடையச் செய்தலும்.

II. பரம்பரை வைத்தியர்கள் மற்றும் ஆயுர்வேத சாஸ்திரி பட்டப்படிப்பிற்கான துறை சார்ந்த ஞானத்தை முன்னேற்ற மடையச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

III. சுதேச மருத்துவ முறை சார்ந்த சிகிச்சைகளை பெறும் உள்நாட்டு, வெளிநாட்டு மக்களின் சுகாதார தேவைகளை வழங்குவதற்கும் அதனை அபிவிருத்தியடையச் செய்வதற்கான வழிவகைகளை ஆராய்தல்

IV. சுதேச மருத்துவர்கள் மற்றும் அத்துறை சார்ந்தவர்களின் அடிப்படை வசதிகள், உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்ற மடையச் செய்தல்

V. சுதேச வைத்திய முறைப்படி ஆரோக்கியத்தைப் பாதுகாப்

[...] பாதிக்கும் விளம்பரங்களை கட்டுப்படுத்த விதிமுறைகளை சிபார்சு செய்தல்

X. மற்றும் முக்கியமானதெனக் கருதப்படும் விடயங்கள் பற்றி ஆராய்தல்

ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுதற்கு மேற்படி குழு அமைச்சரவைக்கு சிபார்சுகளை விதந்துரைக்கும்.

இதேவேளை மேற்படி கூறப்பட்ட விடயங்கள் சம்பந்தமான சுதேச மருத்துவர்கள், அபிமானிகள், கல்விமான்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களை எழுத்து மூலம் குழுவின் தலைவருக்கு அனுப்புமாறும். அமைச்சர் கேட்டுள்ளார்.

தலைவர், சுதேச மருத்துவ கொள்கைக்குழு சுதேச மருத்துவ இடர் நிவாரண அமைச்சு, 320, யூனியன் பிளேஸ், கொழும்பு - 2 என்ற விலாசத்திற்கு ஆலோசனைகளை அனுப்பி வைக்கலாம். (உ)

## குடிக்கும் நீருக்காக வேலணை வாசிகள் அலைச்சல்

(வேலணை)

விநியோகிக்கப்பட்டு வந்தபோதும்

## குடிக்கும் நீருக்காக
# வேலணை வாசிகள் அலைச்சல்

(வேலணை)

புங்குடுதீவுப்பகுதியில் பலத்த குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இதனால் இப்பகுதி மக்கள் குடிநீர் பெறுவதற்காக நீண்ட தூரம் அலைய வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

இதுவரை காலமும் வேலணை பிரதேச சபையினால் பௌசர் வண்டி மூலம் இப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வந்தபோதும் தற்போது குடிநீர் வழங்கும் பௌசர் வண்டி பழுதடைந்ததினால் குடிநீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் விடயத்தில் அசட்டையீனமாய் இருக்காமல் உடனடியாக மேற்படி பௌசர் வண்டியைத் திருத்தி நீர் வழங்குமாறு புங்குடுதீவு மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (உ-47)

தாச நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதேச வைத்திய முறையையும், அதன் அபிவிருத்தியையும் முன்னேற்றமடையச் செய்வதற்கான தேசிய சுகாதார கொள்கை ஒன்றை உருவாக்குதல்.

தேசிய மருத்துவ முறைகளான ஆயுர்வேத மருத்துவம், சித்தமருத்துவம், யூனானி மருத்துவம் மற்றும் பாரம்பரிய மருத்துவம் ஆகியவற்றை அபிவிருத்தியடையச் செய்வதற்கான வழிமுறைகளையும் திட்டங்களையும் சிபார்சு செய்தல். அது சம்பந்தமாக பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமான

அத்துறை சார்ந்தவர்களின் அடிப்படை வசதிகள், உரிமைகள் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்தல்

V. சுதேச வைத்திய முறைப்படி ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கும் அது சம்பந்தமான கல்வி மற்றும் தேவையான அம்சங்களை முன்னேற்றுவதற்குமான வழிவகைகளை சீராக்குதல்.

VI. மூலிகை உற்பத்தி, அவற்றின் பாதுகாப்பு, அவற்றைப் பாவித்தல் சம்பந்தமான செயறபாடுகள்.

VII. தரமான சுதேச மருந்துகளை உற்பத்தி செய்தல், அவற்றை தரக்கட்டுப்பாட்டிற்கமைய தயாரித்தலும் அவவாறு தயாரிக கப்படும் மருந்துசெய் ஸ்தாபனங்களை பதிவு செய்தலும்.

VIII .மேற்படி சுதேச மருந்துகள் தயாரிக்கும் நிலையங்களை அபிவிருத்தி செய்தல்

IX. சுதேச மருத்துவ முறைகளை

தலைவர், சுதேச மருத்துவ கொள்கைக்குழு சுதேச மருத்துவ இடர் நிவாரண அமைச்சு, 320, யூனியன் பிளேஸ், கொழும்பு - 2 என்ற விலாசத்திற்கு ஆலோசனைகளை அனுப்பி வைக்கலாம். (உ)

### உண்டியல் உடைக்கும் முயற்சி முறியடிப்பு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயததின் உண்டியல் உடைக்கும் முயற்சி அயலவர்களின் ஒத்துழைபபினால் முறியடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நண்பகல் 1[illegible] மணியளவில் சன நடமாட்டம் இல்லாத நேரத்தில் இரு இளைஞர்கள் மேற்படி ஆலய உண்டியலை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

உண்டியல் உடைக்கும் சத்தம் கேட்டு அயலவர்கள் கோயிலுக்கு வரவே திருடர்கள் தமது முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர். (த-3,51)

# சமாதானப் பேச்சுக்குறித்த செய்திக்கு பிரான்ஸ் அரசாங்கம் மறுப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான அடுத்தகட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் பிரான்ஸ் தலைநகர் பரிசில் நடைபெறும் என வெளியான செய்திகளை அந்நாட்டு அரசாங்கம்மறுத்துள்ளது.

அத்துடன் சமாதான பேச்சு வார்த்தைகளை பிரான்சில் நடத்துவது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளோ அன்றி இலங்கை அரசாங்கமோ தம்மிடம் வேண்டுகோள் எதனையும் விடுக்கவில்லைஎன்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பேச்சுவார்த்தைகள் குறித்த ஏற்பாடுகளை பிரான்ஸ் அரசாங்கத்தால் மேற்கொள்ளமுடியும் இவ்விடயம்குறித்து இலங்கைஅரசு எவ்வித மறுப்பும் தெரிவிக்காது என தாங்கள் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இருதரப்பினருக்கும் இடையிலான சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு பிரான்ஸ் அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளது என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சை மேற்கொள் காட்டி இந்தியாவிலிருந்து வெளிவரும் ''இந்துப்பத்திரிகை" செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (தி)

# எதிர்க்கட்சியின் மறைமுக ஆதரவை பிரதமர் ரணில் நாடி வருகின்றார்

## இடதுசாரிக் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைமைப் பதவி எதிர்க்கட்சிகளுக்குக் கிடைததால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் எதிர்க்கட்சியின் மறைமுக பங்களிப்பை பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்குழுவின் தலைமைத்துவத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனா மிகவும் பொருத்தமானவர்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் யோசனை சிறந்த எதிர்கால அரசியல் ஒன்றுக்குக் கட்டியங்கூறுவதாக அமைந்துள்ளது.

இப்பதவியை எதிர்க்கட்சியிடம் ஒப்படைப்பதன் மூலம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக அவர்களின் ஒத்துழைப்புடன் முயற்சி செய்கிறார் என்பது தெளிவாகியுள்ளது.

தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிளுக்கு வழங்கியமை குறித்து புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண கருத்துத் தெரிவிக்கையில்,

அரசு பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் போர் தொடுக்காமல் அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள அரசாங்கம் முன்வந்தது மிகவும் முக்கியமானது.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் சமாதானத்தை விரும்புவோர் இன்னமும் இருக்கிறார்கள். ஆதலால் அவர்களையும் சமாதான முயற்சிகளில் இணைத்துக் கொள்ளும்படி ஆரம்பத்திலிருந்தே தான் அரசாங்கத்தைக் கேட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி)

(தொடர்ச்சி)

213. இ.நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
214. மி.வினுஷா- வேலணை நடராஜ வித்தியாலயம்
215. மு.கீதாஜினி- புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்
216. பி. டிபன்ராஜ்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
217. நா.பிரவன்- அளவெட்டி அருணோதயக்கல்லூரி
218. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
219. சி. கேமாவதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
220. சி. சோபிகா-கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
221. செ. மகுந்தன்- கெற்பலி அ.த.க. பாடசாலை
222. ச. சஜீதீப் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
223. வே. தீபராஜ்- யா.மத்திய கல்லூரி
224. பு. றொபின்சியா- கோப்பாய் றோ.க.த.க.பாடசாலை
225. கோ. கெயிஸ்தா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
226. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
227. ஜோ.வோசின்ரன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
228. சி லக்சாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
229. வே.நிருஜன்-மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
230. அ.கனிஷ்ரா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
231. சி வர்ணன்-சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
232. த.சர்மிலன்-சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
233. இ.மிதுசன்-சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
234. த.நிலக்ஷன்- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
235. கு. கோபிகா-வேலணை நடராஜ வித்தியாலயம்
236. உ. விதுசன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
237. கு.விஜிதா- உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
238. கு. நிரோசன்-உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
239. த.ஜெனூறன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியால்யம்
240. இ.தர்சா- சிறுப்பிட்டி இ.த.க.பாடசாலை
241. செ. சஜேந்திரன்- யா/புனித பத்திரிசியார் கல்லூரி
242. க.நிறோசன்-சுன்னாகம் திருஞானசம்பந்தன் வித்தியாசாலை
243. தே. நிதர்சகுமார்-நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்

கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்




# சங்ஸ்தா கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் 19,17 வயதிற்குட்பட்ட பிரிவினருக்கும் 13வயதிற்குட்பட்ட பிரிவினருக்குமிடையில் அகில இலங்கை ரீதியான "சங்ஸ்தா" கிண்ண உதைபந்தாட்டப் போட்டியினை நடாத்த ஏற்பாடுகளை செய்துள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் உரிய விண்ணப்பப்படிவங்களை அவ்வவ் வலயங்களுக்குப் பொறுப்பாக உள்ள உதைபந்தாட்டச் சங்க தலைவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண வலயப் பாடசாலைகள் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரையிடமும் வலிகாமம் வலயப் பாடசாலைகள் யூனியன் கல்லூரி அதிபர் சு.புண ணியசீலனிடமும், வடமராட்சி வலயப் பாடசாலைகள் நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் எஸ். அருணகிரி நாதனிடமும், தென்மராட்சி வலயப் பாடசாலைகள் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வித்தியாலய அதிபர் மு.பாலசுப் பிரமணியத்திடமும் உரிய விண்ணப்பபத்திரத்தைப் பெற்று 15.08.2003ஆம் திகதி வெள்ளிக்கிழமைக் கிடையில் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். விடுமுறை காலத்தில் இப் போட்டிகள் நடாத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது பிறப்புச் சான்றிதழ் தபால் அடையாள அட்டை அளவு கொண்ட இரண்டு புகைப்பட பிரதிகள், அடையாள அட்டைக் கான கொடுப்பனவு ஒவ்வொரு மாணவரிடம் இருந்து 10ரூபா என்பவற்றுடன் வருடாந்த சந்தாப்பணம் 100ரூபாவும் போட்டிக்குப் பங்குபற்றும் கட்டணம் 100ரூபாவு மாக மொத்தம் 200ரூபாவையும் இணைத்து வழங்கப்பட வேண்டும்.

15வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு "சங்கஸ்தா" கிண ணப் போட்டி கடந்த தவணை நடாத்தப்பட்டது குறிபபிடத் தக்கது. (உ)

# பங்களாதேஷ் படுதோல்வி வெற்றிக்கிண்ணம் ஆஸி. வசம்

பங்களாதேஷ் அணிக்கெதிராக நடைபெறற முதலாவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் அவுஸ் திரேலிய அணி 8விக்கெற்றுக் கள:ால் இலகுவாக வெற்றியீட்டி யுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங் களாதேஷ் அணி, 34ஓவர் முடிவில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து, 105ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. பங்களாதேஷ் அணி சார்பாக துஷாட் இம்ரான் 28ஓட்டங்களையும் காலீவ் மயூட் ஆட்டமிழக்காமல் 25ஓட்டங்ளையும் காலீக் மசூட் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய வீரா களான பிரெட்லீ 25ஓட்டங்களுக்கு 4விக்கெற்றையும், கெசன் கிளெப்சி 23ஓட்டங்களுக்கு 3விக்கெற்றையும், அன்ரிபிகெல் 24ஓட்டங்களுக்கு 2விக் கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 22.3ஓவர் முடிவில் 2விக்கெற்றை மட்டும் இழந்து 107ஓட்டங்களைப் பெற்று 8விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில்

## சமாதான விளையாட்டு விழா கோலாகலமாக ஆரம்பம்

சமாதான விளையாட்டு விழா கடந்த ஞாயிறன்று சுகததாஸ விளை யட்டரங்கில் மிக கோலாகலமாக ஆரம்பமானது.

இந்தச் சமாதான விளையாட்டு விழாவில் நாட்டின் பல பாகங்களில இருந்தும் வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆரம்ப வைபவத்தின் போது இலங்கையில் குறுந்தூரஓட்ட வீராங்கனையான சுஸந்திகா ஜெய சிங்க ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

அதன் பின் நடைபெற்ற போட்டி களில் 100மீற்றர் மற்றும் 200மீற்றர் பெண்களுக்கான வட்டப்போட்டியில் எஸ்.பி.ஏ உஸ்மாவதியும் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.


மேலும் ஆண்களுக்கான 1500மீ. போட்டியில் ஜே.எம். ஜெயவீரவும் பெண்களுக்கான 1500மீ. போட்டியில எஸ்.என்.டி.சில்வாவும் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, நிகழ்வில் நடை பெற்ற முன்னணி கால்பந்தாட்ட அணிகளுக் கான கால்பந்தாட்டப் போட்டிகளில் நீர்கொழும்பு யுப்பீற்றர்ஸ் அணியும் யாவாலேன் அணியும் அரை இறுதிப போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதில் நீர்கொழும்பு யுப்பீற்றர்ஸ்

# நல்லூரான் திருவடிக்கு

(இன்று நான்காம் திருவிழா)



## அருள்மழையை பொழிவாய்!

வண்ணத் தமிழ் மொழிக்கு
வள்ளல் நீ தலைவா!
வெள்ளி மயில் துள்ளி வரும்
வேலவா உன் வீதியிலே
கள்ளப் பகையனைத்தும்
கணப்பொழுதில் கலைந்து விடும்
நீலவண்ணக் கடல் மடியில்
காலையிளங் கதிரவன் போல்
கோல மயில் மீதிலேறி
கொடுமையெலாம் கொன்றொழிப்பாய்!
வள்ளிக் கணவா உனையே
வணங்கித் தொழுதெழுவோம்
அள்ளி அருள் மழையை!
அகிலமெல்லாம் பொழிந்தருள்வாய்!

- சி.செ.ருபன், அராலி.

யட்டரங்கில் மிக கோலாகலமாக ஆரம்பமானது.

இந்தச் சமாதான விளையாட்டு விழாவில் நாட்டின் பல பாகங்களில இருந்தும் வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆரம்ப வைபவத்தின் போது இலங்கையில் குறுந்தூரஓட்ட வீராங்கனையான சுஸந்திகா ஜெய சிங்க ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

அதன் பின் நடைபெற்ற போட்டி களில் 100மீற்றர் மற்றும் 200மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங் கனையான சுஸந்திகா ஜெயசிங்க முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஆண்களுக்கான 400மீ. தடை தாண்டல் போட்டியில் அருச்சுனா ரத்னநாயக்காவும், பெண்களுக்கான 400மீ தடைதாண்டல் போட்டியில் மேலும் ஆண்களுக்கான 1500மீ. போட்டியில் ஜே.எம். ஜெயவீரவும் பெண்களுக்கான 1500மீ. போட்டியில எஸ்.என்.டி.சில்வாவும் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, நிகழ்வில் நடை பெற்ற முன்னணி கால்பந்தாட்ட அணிகளுக் கான கால்பந்தாட்டப் போட்டிகளில் நீர்கொழும்பு யுப்பீற்றர்ஸ் அணியும் யாவாலேன் அணியும் அரை இறுதிப போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதில் நீர்கொழும்பு யுப்பீற்றர்ஸ் அணி, றினோன் கழக அணியை 5:4என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டு அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்ற வேளை, யாவாலேன் மற்றும் புளுஸ் ரார் கழக அணிகளுக்கிடையிலான போட்டியில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று யாவா லேன் கழக அணியும் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன.(உ-68)

பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய வீரா களான பிரெட்லீ 25ஓட்டங்களுக்கு 4விக்கெற்றையும், கெசன் கிளெப்சி 23ஓட்டங்களுக்கு 3விக்கெற்றையும், அன்ரிபிகெல் 24ஓட்டங்களுக்கு 2விக் கெற்றுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 22.3ஓவர் முடிவில் 2விக்கெற்றை மட்டும் இழந்து 107ஓட்டங்களைப் பெற்று 8விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் வெற்றி கொண்டது.

இவ் அணியின் மத்தியூகேடன் ஆட்டமிழக்காமல் 46ஓட்டங்களையும் அணித்தலைவர் ரிக்கிபொன்டிங் 29ஓட்டங்களையும் பெற்றுக் கொண டனர். இப்போட்டியின் சிறப்பு ஆட் டக்காரராக அவுஸ்திரேலிய அணியின பிரெட்லீ தெரிவு செய்யப்பட்டார். (உ-68)

## பருத்தித்துறை பிரதேச சபை

# காலநீடிப்பு கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றுவதற்கு இக்ராட் இல் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தக்காரரிடமிருந்து பின்வரும் கால நீடிப்புக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது.

**படிவ விநியோகம் : 18.08.2003ம் திகதி நண்பகல் 12.00மணிவரை**
**படிவம் ஏற்றல் : 19.08.2003ம் திகதி நண்பகல் 12.00மணிவரை**
**படிவம் திறத்தல் : 19.08.2003ம் திகதி பிற்பகல் 14.00மணிக்கு**

### அட்டவணை

| வேலை விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற் வரி |
|---|---|---|---|
| 1. குடத்தனை கடற்கரை, வீதி திருத்தம் | 5000/- | 100/- | 20/- |

கேள்வி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு "*செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி*" என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமோ அல்லது சபையின் கேள்விப்பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ படிவமேற்றல் திகதி நேரத்திற்கு முன்னர் கிடைக்கச்செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
புலோலி.

அ.அ. நடராசா,
செயலாளர்.

[C/6551]

நல்வண்ணக் கடல மடியில
காலையிளங் கதிரவன் போல்
கோல மயில் மீதிலேறி
கொடுமையெலாம் கொன்றொழிப்பாய்!
வள்ளிக் கணவா உனையே
வணங்கித் தொழுதெழுவோம்
அள்ளி அருள் மழையை!
அகிலமெல்லாம் பொழிந்தருள்வாய்!

- சி.செ.ருபன், அராலி.

## நெஞ்சமதில் தினம் நினைத்தேன்

சங்கம் முழங்கி வரும்
தங்கத் தமிழ்த் தலைவன்
வண்ணவழ கொளிரும்
சின்ன மயிலழகன்
குன்று மலைகள் தோறும்
ஆடும் மயிலழகன்
நல்லை நகரமெங்கும்
வீசும் புகழரசன்
வள்ளி மலையழகன்
வந்தான் முருகனவன்
நெஞ்சில் தினம் நினைந்தேன்
செந்தேன் அருள் பொழிவாய்!

- ஆர். நாகேஸ்வரி, சுழிபுரம்.

## சக்தி வடிவாய் திரிவாய்

தனியரசு பழனியில் அமைத்து தமிழை ஆண்டாய்
தமிழ்அரசு இளமையில் சிரிக்க பழனி ஆண்டவனாய்
மயிலோடு உலகம் சுற்றி மகிழ்வோடு திரும்பினாய்
மாவீரர் நிலவில் சக்தி வடிவோடு திரிகின்றாய்

- இருபாலை புலேந்திரராசா முதலியார்.

## கந்தன் புகழினை பாடிடுவீர்

நல்லையில் அருள்நடம் கண்டு துதித்திட
நாடியே வாருங்கள்
தொல்லைகள் தீரும் துன்பம் விலகும்
துதிபல பாடுங்கள்
எல்லையில் கருணை மணிச்சுடர் அவன் திரு
அடியினை நாடுங்கள்
வல்வினை தீர வழிதரும் கந்தன்
புகழினைப் பாடுங்கள் (நல்லை)
உள்ளமும் உவகையில் நீந்திடச் சொல்வீர்
உமைமகன் திருப்புகழே
கள்ளம தின்றியே கருணை புரிவான்
கந்தனின் புகழ் பாடும்
கொள்ளை யின்பம் குலவிட வள்ளியை
கூடிமகிழ் வேலன்
துள்ளிவ ரும்மயில் வாகனன் நல்லை
குமரனின் புகழ் பாடும்

- சு. குகதேவன், தெல்லிப்பழை

## இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுக்கு

# இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்பதை புலிகள் புரிந்துகொண்டுவிட்டனர்

### இதற்கான அழைப்பே பாலகுமாரனின் உரை

### நேரு பல்கலைக்கழக பேராசிரியர் கருத்து

(லண்டன்)

**விடுதலைப்புலிகள் இயக்கம் தமது மக்களுக்காகவே போராடி வருகின்றது என்றால் அதற்காக அரசாங்க ரீதியிலும்சரி, பொது மக்கள் ரீதியிலும்சரி ஒட்டுமொத்த ஓர் ஒத்துழைப்பு பன்னாட்டு ரீதியில் கிடைக்க வேண்டும். அவ்வாறு கிடைத்தால் தான் தாம் மேற்கொள்ளும் போர் வெற்றி கொள்ளும் என்பதைப் புலிகள் உணர்ந்துள்ளனர் என்று புதுடில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் தெற்காசியவியல்துறை பேராசிரியர் சகாதேவன் கூறியுள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற வியாசனின் உலைக்களம் நூல் வெளியீட்டு விழாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த அரசியல் பிரமுகர் வே.பாலகுமாரன் ஆற்றிய உரையைப் பற்றிக் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

மேற்படி நூல் வெளியீட்டு விழா நிகழ்வில் பாலகுமாரன் உரையாற்றும்போது, இந்தியாவின் பிராந்திய அரசியல் நிகழ்வுகளை பாதிக்கும் செயல்களில் விடுதலைப்புலிகள் ஈடுபடமாட்டார்கள். இந்தியாவுடனான நட்புறவை மேம்படுத்துவதற்கு புலிகளின் தலைமை மிகவும் ஆர்வமாக இருப்பதாகவும் கூறியிருந்தார்.

**பின்னணிக் காரணம்**

இந்தக் கருத்துக்களின் பின்னணிக் காரணங்கள் என்னவாக இருக்கக்கூடும் என்பது குறித்து பி.பி.ஸி. தமிழ் சேவைக்கு கருத்து வெளியிட்ட பேராசிரியர் சகாதேவன் மேலும் கூறுகையில்,

பாலகுமாரன் இவ்வாறு கூறியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதோர் விடயம். இதிலிருந்து புலிகள் முன்பு சில தகாத செயல்களில் ஈடுபட்டு வந்திருப்பினும் இவ்வாறான செயல்களில் இனி ஈடுபடமாட்டார்கள் என்பது தெள்ளத் தெளிவாகின்றது.

அடுத்ததாக புலிகள் இந்தியாவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே இவ்வாறு கூறியிருக்கின்றனர். அதுவும் மிகவும் வரவேற்கத்தக்கது.

புலிகள் தமக்கு இந்திய அரசினதும், இந்திய மக்களினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது என்பதை உணர்ந்திருப்பது வரவேற்கத்தக்கதோர் நிகழ்ச்சி. அப்படி ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே அவர்கள் தாம் மேற்கொண்டுவரும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் வெற்றி கிடைக்கும் என்று உணர்ந்திருப்பது மகிழ்ச்சிக்குரியது என்றார்.

**உறவைப் புதுப்பிக்கப் புலிகள் ஆர்வம்**

அதேசமயம், சர்வதேச அரங்கில் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்ளுமாறு புலிகளின் மீது விடுக்கப்படும் அழுத்தம் காரணமாகவே இந்தியாவுடனான தமது உறவைப் புதுப்பித்துக் கொள்வதற்கு புலிகள் ஆர்வம் காட்டுவதாக கூறியிருப்பதாக நிலவி வரும் கருத்து சரியானதா எனக் கேட்கப்பட்டதற்கு,

இருக்கலாம். அது ஒரு கருத்து மட்டுமே. புலிகளின் தற்போதைய எண்ணம் என்னவெனில் தம் மீதான அழுத்தத்தைக் குறைப்பது. அத்துடன், மேலும் சில காரணங்களும் இது தொடர்பாக இருக்கலாம்.

இந்திய அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே நிலவிவரும் இராணுவ நட்பும் ஒரு காரணமாக இருக்கலாம். ஏனென்றால் இரண்டு நாடுகளுக்குமிடையில் பெருகிவரும் இராணுவ ரீதியிலான நட்பு, புலிகளுக்கு ஓர் இடைஞ்சலான விடயமாகவே இருக்கிறது.

அடுத்ததாகப் புலிகள் என்ன எண்ணுகின்றனர் என்றால், கடைசி நிமிடத்தில் கூட பேச்சுவார்த்தையில் ஒரு முன்னேற்றம் காணப்பட்டு ஒரு நிரந்தரமான தீர்வு வருமென்றால் அதற்கு இந்திய அரசின் ஒத்துழைப்பும் தேவை.

அவ்வாறு இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகளும் வெற்றியடையும். அப்படி ஒரு தீர்வு ஏற்பட இந்திய அரசின் உதவி தமக்கு எப்போதும் தேவை என்றும் இந்திய அரசுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்வது தமக்கு நன்மையே தரும் எனவும் உணர்ந்துள்ளனர்.

**இந்திய அரசின் செல்வாக்கு**

அத்துடன். பன்னாட்டு ரீதியாக இந்திய அரசாங்கத்திற்குள்ள செல்வாக்கும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்திய அரசாங்கம் இலங்கைப் பிரச்சினைத் தீர்வில் நேரடியாகத் தலையிடாமல் இருந்தாலும் பல நாடுகள் இந்தியாவின் பங்களிப்பை அங்கீகரித்து வருவதனால் இவற்றை உணர்ந்து நட்புறவை ஏற்படுத்த புலிகள் முனைவது ஒரு நல்ல செயலே என்று குறிப்பிட்டார்.

இம்மாத நடுப்பகுதியளவில் கொழும்பில் நடைபெறவுள்ள இந்திய-இலங்கைக் கூட்டுப் பொருளாதார ஆணையக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா இலங்கைக்குச் செல்லவுள்ளார். இந்தச் சமயத்தில் வடுதலைப் புலிகள் இந்தியாவுடன் நல்ல உறவைப் பேண விரும்புவதாகக் கூறியிருப்பது எந்தவிதமான பின்விளைவுகளை ஏற்படுத்துமென நீங்கள் நினைக்கிறீர்கள் என வினவப்பட்டபோது,

முக்கியமாக இது ஓர் இராஜதந்திர நடவடிக்கையாகக் கூட இருக்கலாம். ஏனென்றால் இந்தியாவிலிருந்து ஒரு தலைவர் இலங்கைக்குச் செல்கிறார் என்றால் அவர்கள் இலங்கைப் பிரச்சினையைப் பற்றி நிச்சயம் விவாதிப்பார்கள்.

**புலிகளின் கவலை**

அப்படி விவாதிக்கப்படும் போது புலிகளின் பங்கும் அதில் வரும். அப்படி வரும்போது இந்தியத் தலைவர்கள் புலிகளுக்கு எதிராக கருத்து வெளியிடக்கூடாது. இலங்கை அரசு ஏதாவது அவதூறாகப் பேசிவிட்டால் அதை ஒத்துக் கொள்ள கூடாது என்பதை மனதில் வைத்துக்கொண்டுதான் புலிகள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம்.

ஏனென்றால் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் இலங்கை வருவது ஓர் முக்கியமான நிகழ்வு. இதன்பின் என்ன முடிவுகள் எடுக்கப்படும் என புலிகள் கவலைப் படலாம். ஆகையால் இப்படியோர் கருத்தை வெளியிடுவதன் மூலம் புலிகள் இந்தியாவிற்கு ஓர் சமிக்ஞையை அனுப்புகிறார்கள்.

அப்படி அனுப்புவதன் மூலம் தமது எண்ணத்தை தெளிவுபடுத்துகிறார்கள். அவர்கள் இந்தியாவுடன் பகைக்கமாட்டார்கள். இந்தியாவுடனான முரண்பாடுகளை களைய அவர்கள் முன்வந்துள்ளார்கள். இந்தியாவின் ஆதரவையும் நட்பையும் அவர்கள் விரும்புகின்றனர் என்பதை உணர்த்துகின்றனர் என்றார்.

புலிகளின் இவ் அறிவிப்பு இந்தியாவைத் திருப்திப்படுத்தும் என்பது சந்தேகத்திற்கிடமானதே. இந்தியாவில் தற்போது நிலவி வரும் கருத்து 10 வருடங்களாக உருவாக்கப்பட்ட ஒரு கருத்து. அதை ஒரு சிறிய அறிவிப்பினால் மாற்றமுடியாது.

முக்கியமாக இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புலிகளை நம்ப முடியாது. அவர்கள் சொல்லொன்று செயலொன்று என்ற ரீதியிலான கருத்துக்களையே கொண்டுள்ளார்கள்.

இதில் ஏதாவது மாற்றம் ஏற்பட வேண்டுமானால் இலங்கையில் ஏதாவது மாற்றங்கள் வரவேண்டும். இலங்கை அரசிற்கும் புலிகளுக்கும் இடையேயான உறவில் மாற்றம் வரவேண்டும். அதுவும் பேச்சுவார்த்தைகளின் மூலமே வரவேண்டும். அப்பொழுது தான் இந்திய அரசாங்கத்தின் நிலையில் மாற்றம் வரும் என்றார்.

(உ-8)

# உலகத் தமிழ் இணைய 6வது மாநாடு சென்னையில் 22ஆம் திகதி ஆரம்பம்

### முதல்வர் ஜெயலலிதா துவக்கி வைப்பார்

(சென்னை)

**தகவல் தொழில்நுட்பத்தின் வாயிலாக தமிழில் கல்வி என்னும் கருப்பொருளோடு ஆறாவது உலகத் தமிழ் இணைய மாநாடு வரும் 22ஆம் திகதி சென்னையில் ஆரம்பமாகவுள்ளது.**

**இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலிருந்து பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.**

**அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள விவேகானந்தா கலையரங் கில் இம்மாநாட்டை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெயலலிதா தொடக்க வைக்கவுள்ளார்.**

இந்த மாநாட்டின் கருத்தரங்கும் கண்காட்சியும தாஜ் கோரமண்டல் நட்சத்திரவிடுதி வளாகத்தில் 22,23,24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து இணையம், கணனி, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கருவிகள், பொருட்கள் மற்றும் சேவைகள் ஆகியன இடம் பெறவுள்ளன.

இந்தக் கண்காட்சியை தமிழகத் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஜெயக்குமார் தொடக்கி வைக்கவுள்ளார்.

இம்மாநாடு குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஜெயக்குமார், இம் மாநாட்டை நடத்த தமிழக அரசின் சார்பாக 20 லட்சம் ரூபா அளிக்கப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகத்திற்கு இந்த ஆண்டு வெள்ளிவிழா ஆண்டு என்பதால் தமிழ் இணைய மாநாட்டினை வெள்ளிவிழா ஆண்டின் நிகழ்சிகளில் ஒன்றாக நடத்த அண்ணா பல்கலைத் துணை வேந்தர் முனைவர் எ.பாலகுருசாமி முன்வந்துள்ளார் என்று கூறிய அமைச்சர், இம்மாநாட்டின் கருத்தரங்கில் தமிழ் மொழியின் வளர்ச்சி தொடர்பான ஆய்வுகளின் பேரில் பரிந்துரைக்கப்படும் நல்ல முடிவுகளை தமிழக அரசு பரிசீலித்து அதற்குரிய தரங்களை அறிவிக்கும் என்று கூறியுள்ளார்.

முன்னதாக மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் குறித்து செய்தியாளர்களுக்கு விளக்கிய தமிழ் இணைய பல்கலைக்கழகத்தின் இயக்குநர் முனைவர் பொன்னவைக்கோ இந்த மாநாட்டில் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து பங்கேற்கவுள்ள பேராளர்கள் 45ற்கும் ஆய்வுக் கட்டுரைகளை படிக்கவுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

**முக்கிய நோக்கங்கள்**

- தமிழ்த் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை மக்கள் பார்வைக்கு எடுத்துச் செல்லல்.
- தமிழ் தகவல் தொழில்நுட்பப் பயன்பாட்டில் பள்ளி மாணவர்களை ஈடுபடுத்துதல்.
- கல்லூரி மாணவர்களின் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஆர்வத்தை ஊக்குவித்தல்.
- கணனித் தமிழ் தொழில்நுட்ப வளர்ச்சிகளை கருத்தரங்குகளில் கலந்தாய்வுசெய்தல்.
- தரப்படுத்தப்பட்ட தமிழ் எழுத்து தரப்பாடு, விசைப் பலகை ஆகியவற்றை அனைவரும் பயன்படுத்தும் வகையில் விழிப்புணர்வூட்டல்.
- தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் இணைய வழிக் கல்வியை உலகு தழுவி வாழும் தமிழர்கள் அனைவரும் பயன் படுத்திக்கொள்ள தேவையான வழிவகைகள் பற்றி ஆய்தல்.
- யூனிகோடு தமிழ் எழுத்துத் தரப்பாட்டில் உள்ள சிக்கல்கள் பற்றி ஆய்தல்.
- தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஆய்தல்.
- தமிழக அரசின் மின்னாழுமை, மின்சேவை போன்ற தமிழ்த் தகவல் தொழில்நுட்பக் கோட்பாடு களை தீவிரமாக செயற்படுத்த தேவையான வழிவகைகள் பற்றி ஆய்தல்.

ஆகியவை இந்த உலகத் தமிழ் இணைய மாநாட்டின் முக்கிய நோக்கங்கள் என்று கூறிய முனைவர் பொன்னவைக்கோ இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் பள்ளி மாணவர்களிடையே தமிழ் கணனியின் மீது ஆர்வம் ஏற்படுத்தும் வகையில் தமிழ் மென்பொருளாக்கப்போட்டிகள் இடம்பெறவுள்ளன என்று கூறினார். (பி)

## பொ.ஐ.மு. ஆட்சிக்காலத்தில் 300 பாடசாலைகளுக்கு மூடுவிழா

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் 300க்கும் மேற்பட்ட கிராமிய பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்விஅமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1996ஆம் ஆண்டுக்கும் 1999 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் அப்போது ஆட்சியில் இருந்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை மறுசீரமைப்புத் திட்டத்தினாலேயே இப்பாடசாலைகளை மூடவேண்டி நேரிட்டது.

தேசிய கல்வி ஆணைக்குழு அதிகாரிகள் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் இத்தகவல் தெரியவந்துள்ளது.

ஆனால் பாடசாலைகள் மூடப்படுவதை தடுக்கும் நோக்கில் கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## நீதிமன்றம் பணிப்புரை

(கொழும்பு)

நாளாந்த நகர சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து உள்ளூராட்சிச் சபைகள் மேற்கொள்ள வேண்டும்என மேன்முறையீட்டு நீதிமன்றம் பணிப்புரை விடுத்துள்ளது.

கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாநகர சபை உட்பட 14 உள்ளூராட்சிச் சபைகள் சரியான முறையல் நகர சுத்திகரிப்புத் தொழிலை மேற்கொள்வதில்லை என சமர்ப்பிக்கப்பட்ட மனுவை ஆராய்ந்த பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் இவ்வுத்தரவைப் பிறப்பித்துள்ளது. (தி)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 28 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

❊ **கீழ்வரும் பாடலைக் கவனமாக வாசித்து விடை எழுதுக.**

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்

❊ **ஒத்த சொல் தருக.** **எதிர்ச் சொல் தருக.**

01. மனம்: .............................. 05. நினைவு: ..............................
02. தனம்: .............................. 06. நல்லது: ..............................
03. இன்பம்: .............................. 07. கனவு: ..............................
04. தரணி: .............................. 08. பெருமை: ..............................

❊ **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

09. பொருள்: .............................. 10. கை: ..............................
11. தரணி: .............................. 12. நல்லது: ..............................

❊ **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

13. Mind : .............................. 14. Sweet: ..............................
15. Proud : .............................. 16. Word: ..............................

❊ **கீழ்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.**

17. வாழை + பழம் .............................. 18. ஆகாயம் + விமானம் ..............................
19. கண் + விழி .............................. 20. மரம் + வேர் ..............................

❊ **கீழ்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக**

21. கடற்கரை .............................. 22. கல்வீடு ..............................
23. கடலலை .............................. 24. தாமரைப் பூ ..............................

❊ **இப்பந்தியைக் கவனமாக வாசித்து அதன் கீழ்த் தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக**

விளையாட்டு உடல் பலத்தைத் தருவது மட்டுமன்றி அதற்கு மேலாக வாழ்வில் வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய மனப் பக்குவத்தையும் வளர்த்துத் தருகின்றது. இதற்குச் சிறந்த உதாரணமாக கிரிக்கெற் விளையாட்டைக் கூறலாம். ஆரம்பத்தில் நன்கு ஆடிக்கொண்டிருக்கும் ஓர் ஆட்டக்காரன் எதிரணியின் சிறந்த பந்து வீச்சினால் திடீரென ஆட்டமிழந்து போகலாம். ஒரு பந்து வீச்சே ஒரு அணியின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

25. இப்பந்தியில் குறிப்பிடப்படும் பிரதான கருத்து
1) விளையாட்டு உடற் பலத்தைத் தருகிறது.
2) விளையாட்டு வீரர்களது வெற்றி தோல்வி ஒரு பந்தினால் நிச்சயிக்கப்படும்.
3) விளையாட்டு உடற் பலத்தை தருவது மட்டுமன்றி அதற்கும் மேலாக வாழ்வில் வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்கும் மனப்பக்குவத்தையும் வளர்க்கிறது.

26. இப்பந்தியில் உதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்ட விளையாட்டு
1) உதைபந்தாட்டம் 2) கிரிக்கெட் 3) கைப்பந்து

27. இப் பந்தியில் கூறப்படாத கருத்து.
1) விளையாட்டு உடற் பலத்தைக் கொடுக்கும்.
2) விளையாட்டில் வெற்றி தோல்வி மாறி மாறி வரும்.
3) விளையாட்டில் எப்பொழுதும் வெற்றியே பெறப்படும்.

28. இப்பந்தியில் ...

40. இவர்களில் மூன்றாவதாக வந்தவர் பெயரை எழுதுக?
..............................
41. இந்த ஆறு மாணவரில் இறுதியாக வந்தவர் பெயரை எழுதுக?
..............................
42. குணாளன் இந்தத் தூரத்தை ஓடி முடிப்பதற்கு எவ்வளவு நேரம் எடுத்தார்?
..............................
43. இவர்களில் இரண்டாவதாக வந்தவர் முதலாவதாக வந்தவரிலும் எவ்வளவு நேரம் பிந்தி வந்தார்?
..............................

❊ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

44. முள்ளந்தண்டு இல்லாதது. (பாம்பு, அட்டை, பல்லி)
45. நீரில் வாழும் தாவரம். (தாமரை, கரணை, மரவள்ளி)
46. பூச்சிகள் கவரப்படுவது. (இலையால், பூவால், காயால்)
47. உயிரற்ற பொருளின் இயல்பு. (வளர்ச்சியடையாமை, சுவாசித்தல், இடம்பெயர்தல்)
48. கிளை கொள்ளாத தாவரம் (மிளகாய், வெங்காயம், குப்பைமேனி)

❊ **நாம் தினமும் சந்திக்கும் இரு அங்கிகள் வீட்டு ஈ, நுளம்பு ஆகும். இவற்றினால் எமக்கு ஏற்படும் சிரமங்கள் ஒவ்வொன்று எழுதுக.**

| | | |
|---|---|---|
| 49. | வீட்டு ஈ | |
| 50. | நுளம்பு | |

❊ **மேற்படி சிரமம் ஏற்படாதிருக்க /தவிர்க்க நீர் கையாளக்கூடிய ஒவ்வொரு வழிமுறைகளையும் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 51. | வீட்டு ஈ | |
| 52. | நுளம்பு | |

❊ **மேலே சொல்லப்பட்ட அங்கிகளினால் எமக்கு பரப்பப்படும் நோய்கள் ஒவ்வொன்றை எழுதுக.**

| | | |
|---|---|---|
| 53. | வீட்டு ஈ | |
| 54. | நுளம்பு | |

❊ **கீழ்வரும் அங்கிகள் எவ்வாறு விவசாயிகளுக்கு உதவுகின்றன என எழுதுக.**

| | | |
|---|---|---|
| 55. | மண்புழு | |
| 56. | தேனீ | |
| 57. | வண்ணத்துப்பூச்சி | |

❊ **வரனிடம் இப்பொருட் பட்டியலைக் கொடுத்து அவற்றை வாங்கி வருமாறு அவனது அம்மா கூறினார். இப்பொருட் பட்டியலையும் விலைப்பட்டியலையும் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| பாலா பலசரக்குக் கடை<br>விலைப்பட்டியல் | | ரூபா | சதம் |
|---|---|---|---|
| அரிசி | 1kg | 32 | 00 |
| பருப்பு | 500g | 21 | 00 |
| பச்சையரிசி | 1kg | 35 | 00 |
| செ.மிளகாய் | 500g | 75 | 00 |
| சீனி | 1kg | 30 | 00 |
| கோவா | 1kg | 24 | 00 |
| மிளகாய் | 1kg | 40 | 00 |
| பீற்றூட் | 1kg | 35 | 00 |

| பொருட் பட்டியல் |
|---|
| அரிசி 10kg |
| பருப்பு 250g |
| செத்தல் மிளகாய் 2kg 250g |
| கோவா 125g |
| சீனி 2kg |
| மிளகாய் 50g |
| கருவாடு 1kg |
| வாழைப்பழம் $^1/_2$kg |

58. வரன் தனது பொருட் பட்டியலில் உள்ள எப் பொருட்களை "பாலா பலசரக்கு கடையில்" வாங்கியிருக்க முடியாது.
..............................

❊ **வரன் "பாலா பலசரக்குக் கடையில்" வாங்கிய பொருட்களுக்கான சிட்டையை அவனது பொருட் பட்டியலின் அடிப்படையில் தயாரிக்குக.**

| பொருட்கள் | அளவு | | ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| | kg | g | | |

1) விளையாட்டு உடற் பலத்தைத் தருகிறது.
2) விளையாட்டு வீரர்களது வெற்றி தோல்வி ஒரு பந்தினால் நிச்சயிக்கப்படும்.
3) விளையாட்டு உடற் பலத்தை தருவது மட்டுமன்றி அதற்கும் மேலாக வாழ்வில் வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக ஏற்கும் மனப்பக்குவத்தையும் வளர்க்கிறது.

26. இப்பந்தியில் உதாரணமாக எடுத்துக் கொள்ளப்பட்ட விளையாட்டு
1) உதைபந்தாட்டம் 2) கிரிக்கெட் 3) கைப்பந்து

27. இப் பந்தியில் கூறப்படாத கருத்து.
1) விளையாட்டு உடற் பலத்தைக் கொடுக்கும்.
2) விளையாட்டில் வெற்றி தோல்வி மாறி மாறி வரும்.
3) விளையாட்டில் எப்பொழுதும் வெற்றியே பெறப்படும்.

28. இப்பந்தியில் ஒரு ஒத்த சொல்லும் அதற்குரிய எதிர்சசொல்லும் தரப்பட்டுள்ளது. அவை
1) உண்டு, இல்லை 3) வெற்றி, தோல்வி 3) ஆரம்பத்தில், இறுதியில்

29. உடற்பலம் என்னும் சொல்லினால் கருதப்படுவது.
1) நல்ல ஆரோக்கியமான திடகாத்திரமான உடல்.
2) மற்றவர்களுடன் அடிபடக் கூடிய ஆற்றலுள்ள உடல்.
3) வெற்றி தோல்வியை ஏற்கக் கூடிய உடல்.

30. விளையாட்டு என்பதன் ஆங்கிலச்சொல்
1) Play 2) Playground 3) Pallai

31. "கீழாக" என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ஒன்று பந்தியில உண்டு. அதன் கீழ் கோடிடுக.

32. "விளையாட்டை" என்னும் சொல்லினைச் சுற்றி பெட்டி வரைக.

**✲ சரியான விடையைத் தெரிவு செய்க.**

33. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள விலங்கு
1) யானை 2) புலி 3) சிங்கம் 4) ஓணான்

34. பூமி உருண்டையானது எனினும் நாம்விழாமல் இருக்கின்றோம் இதற்கான காரணம்
1) எமது புத்திசாதுரியம் 2) பூமியின் ஈர்ப்பு சக்தி
3) எமது கவர்ச்சியான தோற்றம் 4) பூமி மிகவும் பெரிய உருண்டையாயிருப்பதால்

35. ஏனையோர் மன எண்ணங்களை அறியக் கூடிய கருவியொன்று உம்மிடம் இருந்தால் நீர் அக்கருவியை வைத்துக்கொண்டு
1) அவர்கள் மனத்திலுள்ளதை எல்லாம் வெளிப்படுத்தி அவர்களை அதிசயிக்கச் செய்வீர்.
2) அவர்கள் மனப்பிரச்சினைகளை அறிய முடியுமாகையால் அதற்குரிய தீர்வினைச் சொல்லுவீர்.
3) அவர்கள் மனம், உணர்வுகள், உமக்குத் தெரிவதால் அவர்களைப் புரிந்து கொண்டு பிரச்சினைகளைத் தவிர்த்து வாழ விரும்புவீர்.
4) உம்மை மிகவும் வலிமையுள்ள ஒருவராக காட்டி பணம் சம்பாதிப்பீர்.

**✲ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய கூடுகளுக்குள் எழுத்துக்களை இட்டு கருத்து நிறைந்த சொல்லை ஆக்குக. உதாரணத்தை நனகு அவதானிக்குக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1ஆ | 2சி | ரி | ய | ர் |
| | | | | |
| | 3தி | | | |
| | | | | |
| 4க | | | லை | |

***இடமிருந்து வலம்***
(உ + ம்) 1) மாணவர்களுக்கு அறிவூட்டும் புனிதமான தொழிலைச் செய்பவர்
36. 3) மாதத்தின் ஒத்த சொல்
37. 4) இரும்பு வேலை நடைபெறும் ஓர் இடம்

***மேலிருந்து கீழ்***
38. 2) பல வர்ண நிறங்களைக் கொண்டு வரையப்படுவது.

**✲ அண்மையில் யாழ். பனிப்புலம் மத்திய மகாவித்தியாலய மாணவர்களில் வீதியோட்டத்தில் பங்கு கொண்ட 6 மாணவர்களுக்கு எடுத்த நேரத்தை இந்த அட்டவணை காண்பிக்கின்றது.**

| | | | |
|---|---|---|---|
| குணாளன் | 1மணி 05 நிமிடங்கள் | சாந்தன் | 58 நிமிடங்கள் |
| குமரன் | 1மணி 02 நிமிடங்கள் | சாம்பசிவம் | 54 நிமிடங்கள் |
| கண்ணாளன் | 1மணி 10 நிமிடங்கள் | பிரபாகர் | 1மணி 25 நிமிடங்கள் |

39. இவர்களில் முதலாவதாக வந்தவர் பெயரை எழுதுக?
..............................................................................

| | | | |
|---|---|---|---|
| மிளகாய் | 1kg | 40 | 00 |
| பீற்றூட் | 1kg | 35 | 00 |

58. வரன் தனது பொருட் பட்டியலில் உள்ள எப் பொருட்களை "பாலா பலசரக்கு கடையில்" வாங்கியிருக்க முடியாது.
..............................................................................

**✲ வரன் "பாலா பலசரக்குக் கடையில்" வாங்கிய பொருட்களுக்கான சிட்டையை அவனது பொருட் பட்டியலின் அடிப்படையில் தயாரிக்குக.**

| பொருட்கள் | அளவு | | ரூபா | சதம் |
|---|---|---|---|---|
| | kg | g | | |
| 59. | | | | |
| 60. | | | | |
| 61. | | | | |
| 62. | | | | |
| 63. | | | | |
| 64. | | | | |
| 65.மொத்தம் | | | | |

66. வரன் பாலா பலசரக்குக்கடையில் செலவு செய்த மொத்தப் பணத்தை சொற்களில எழுதுக?
..............................................................................

67. வரனிடம் மிகுதியாகவுள்ள பணத்தில் 1/2kg கருவாடு வாங்க முடியுமெனில் அவனிடம் மிகுதியாகவுள்ள பணம் எவ்வளவு? (1/4kg கருவாடு ரூபா 8.50எனக்.)
..............................................................................

68. அம்மா வரனிடம் கொடுத்த பணத்தின் மொத்தப் பெறுமதி யாது?
..............................................................................

✲ "வானம் கறுத்து மின்னல் மின்னியது இடி இடித்தது குளிர் காற்று வீசியது மரங்கள் சரிந்து ஆடின. மழை பெய்தது. எங்கும் வெள்ளம் பாய்ந்தது'.'

69. மேலே தரப்பட்ட நிகழ்வை ஒரு வசனத்தில் எழுதுக.
..............................................................................




70. இவ் நிகழ்வு இயற்கையானதா? செயற்கையானதா?
..............................................................................

71. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்துள்ள சொல்லையும் எதிர்க் கருத்துள்ள சொல்லையும் எழுதுக?
..............................................................................

| | **ஒத்த கருத்துச் சொல்** | **எதிர்க் கருத்துச் சொல்** |
|---|---|---|
| வானம்: | .............................. | .............................. |
| குளிர்மை: | .............................. | .............................. |

**✲ கீழே உள்ள கூடுகளுக்குள் தரப்பட்டுள்ள சொற்களை கீழ்வரும் சொற்களுட கருத்தமைய தொடர்புபடுத்தி எழுதுக.**

**Rectangle, Triangle, Square, Circle**

72. 
73. 
74. 
75. 

.................... .................... .................... ....................

**✲ "எனது பிறந்த நாளின் போது..." என்னும் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலையுடன்கூடிய 06வாக்கியங்கள் எழுதுக. உமது ஒவ்வொரு வாக்கியமும் 04.சொற்களுக்குக் குறையாது எழுதப்பட்டிருக்க வேண்டும்.**

76. ..............................................................................
77. ..............................................................................
78. ..............................................................................
79. ..............................................................................
80. ..............................................................................
81. ..............................................................................

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 26

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:

01. ஸ்ரீ. சரத்பவன்- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
02. இ. பவீசன் - உடுவில் மகளிர் கல்லூரி
03. சு. நிலக்ஸன்- யா/ மத்திய கல்லூரி
04. கு. கோபிரஞ்சன்- உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
05. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
06. க. சிந்துஜன்- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
07. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
08. சி. சிவநாதன்- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
09. செ. கலிஸ்ரா- நவாலி சென்பீற்றேஸ் றோ.க.த.க. பாடசாலை
10. த. தனுஷ்யா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
11. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
12. கு. விஜிதா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
13. ந. பரந்தாமன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
14. கு. மதிவாணி- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
15. செ. சிவதர்சினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
16. இ. ஜனார்த்தனி- வேலணை நடராஜ வித்தியாலயம்
17. செ. திலக்ஷன்- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
18. நா. தேனுயா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
19. மா. றொஷாந்தி- ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலை
20. கு. சன்ஜீவன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
21. ச. நியோஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
22. பா. கோகிலன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
23. ந. வினோரூபன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
24. வி. கஸ்தூரி- வல்வை றோ.க.த.க பாடசாலை
25. ப. சங்கீர்த்தனா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
26. ம. கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரவுசு மகாவித்தியாலயம்
27. தி. திருமாறன்- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
28. கி. பிரசன்னா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
29. கி. பஞ்சுகா- யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
30. ச. சுவஸ்திகா- இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை
31. ச. சுவீபன்- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
32. ஆ. சஜீபன்- கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயம்
33. பு. பபிகரன்- அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்
34. க. அகிலன்- வரணி மகாவித்தியாலயம்
35. ற. ஜென்சன்- கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை
36. ர. வதுஷ்ணன்- யா/மத்திய கல்லூரி
37. பா. பகீரதன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
38. க. செல்வி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
39. செ. விமோசனன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
40. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
41. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
42. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
43. ஜெ. சயந்தன்- யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
44. ச. கலைச்செல்வன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம
45. சி. நிலக்சன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
46. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
47. யோ. ஆரணி- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
48. பா. துஷாரா- வேலணை நடராஜ வித்தியாலயம்
49. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
50. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம
51. ச. நந்துஜா- பெரிய புலம் மகாவித்தியாலயம்
52. ச. தனேசன்- திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
53. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்

100. ஐ. சயோராஜ்- யா/மத்திய கல்லூரி
101. க. தாசிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
102. ச. சோபிகா- துன்னாலை மெ.மி.த.க. பாடசாலை
103. ஆ. நிரோஜினி- நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க பாடசாலை
104. சி. யோதிகா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
105. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
106. ஜெ. கோபிராஜ்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
107. த. தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
108. த. நீருஜா- வல்வை றோ.க.த.க. பாடசாலை
109. மா. சர்மிளன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
110. பா. கிருஷ்ரின்வேணி உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலை
111. அ. கீர்த்தனா- வேலணை நடராஜ வித்தியாலயம்
112. கு. சஞ்சிகா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
113. பா. சிவனருட்செல்வசர்மா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
114. வே. சரண்ணியா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
115. தி. தசேந்திரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
116. இ. ரேணுகா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
117. ஜெ. பவதாரணி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
118. க. லக்ஷனா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
119. சி. கெஜரூபன்- தாவடி இ.த.க.பாடசாலை
120. ப. சுதன்- உடுவில் மகளிர் கல்லூரி
121. தி கௌரி- திருநெல்வேலி றோ.க.த.க. பாடசாலை
122. மோ. ஜனனி- யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்
123. யோ. சரண்யா- சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
124. சி. சுகனியா- மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்
125. வி. விதுர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
126. சி. சாதோக்- யா/ மத்திய கல்லூரி
127. செ. துவாரகன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
128. ஜி. அபர்னா- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
129. ம. கஜந்தன்- யா/இந்து ஆரம்பப் பாடசாலை
130. சி. மனோஜிதன்- கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
131. எஸ். பிறேமிலா- தேவரையாளி இந்துக் கல்லூரி
132. சி. காயத்திரி- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
133. பா. துஷாந்தி- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
134. கு. சிரஞ்ஜீவன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
135. இ. பிரசாத்- வதிரி திருஇருதயக் கல்லூரி
136. கு. கோபிராம்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
137. த. பிரியந்தி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
138. ச. லக்ஷிகா- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
139. ந. கவிகரன்- சரவணை மகாவித்தியாலயம்
140. பொ. கோகிலன் மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
141. கு. பிரசாந்- யா/மத்திய கல்லூரி
142. ஆ. கஜீபன்- யா/மத்திய கல்லூரி
143. அ. பேசுகி- நவாலி மகாவித்தியாலயம்
144. ந. நிவாஷன் யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
145. ம. மோகன்ராஜ் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
146. லி. சஜீத்தா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
147. ரா. டுர்க்கா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
148. சா. விஜிகலா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
149. ச. அகலியா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
150. ச. உஜந்தன்- வேலணை நடராஜ வித்தியாலயம்
151. ப. ஹரிதர்ஷன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
152. எஸ் தர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
153. செ. ஞானகௌரி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
154. செ. ரகீம்டீநெல்சன்- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
155. ர. சாம்பவி- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
156. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
157. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
158. பா. சரூபா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
159. சி. கானமிர்தா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
160. த. துஷாந்- யா/ மத்தியகல்லூரி
161. தி. அருந்தசா- விக்னேஸ்வராக்கல்லூரி
162. பு. கிருசா- நவாலி மகாவித்தியாலயம்
163. ச. தர்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
164. இ. சகிலா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
165. தி. கிரிசாந்- வேலணை நடராஜ வித்தியாலயம்
166. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
167. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை

## வினாத்தாள் 26-ன் விடைகள்

01. வயல்வெளிப்பிரதேசம்
02. வரவேற்பதைப்போல மெல்ல வருடியது
03. மரங்களிலிருந்து
04. தலைகுனிந்து நிற்கும் சிறுமியைப்போல
05. இறகு விரித்த படி
06. வானத்து முகில்கள் ஒரேயடியாகக் கவிழ்ந்து விழுந்ததுபோல
07. நான்
08 காற்று, சிறுமி
09. நடந்தேன்
10. குளிர்ந்த, தென்றல்
11. மெல்ல
12. உருண்டு திரண்டு
13. குவியல் குவியலாக
14 பச்சைப்பசேல்
15. இறந்த காலம்
16. வயல்
17. வானம்
18. நறுமணம்
19. குளிர்
20 தென்றல்
21 நறுமணம்
22. சூடான
23 விரைவாக
24. வெண்மை + முகில்
25. நெல்+ கதிர்கள்
26. எங்கு + இருந்தோ
27. நெல்வயல்
28. காற்று
29. பூ
30. வானம்
31. முகில்
32. ரூ. 20.00
33. ரூ. 28.00
34. ரூ. 24.00
35. ரூ. 14.00
36. மிளகாய்
37. ரூபா 56.00
38. மிளகாய்
39. பூசணி
40. பூசணி
41. ரூபா 62.00
42. ரூபா 68.00
43. 0005 மணித்தியாலம்
44. 0330 மணித்தியாலம்
45. 1230 மணித்தியாலம்
46. 1640 மணித்தியாலம்
47. அலரிமாளிகை
48. மணல் மண்
49 ஆசியா
50. பூ
51. மில்லிமீற்றர்
52. பாடசாலை அதிபர்
53. ப்பாடசாலை கீதம்
54. 3
55. ஒலிம்பிக் தீபம்
56. நீளம் பாய்தல்,குண்டெறிதல்
57. (2) 58. (1) 59. (4)
60. (5) 61. (3) 62. (7)
63. (6) 64. (9) 65. (10)
66. (8) 67. (✓) 68. (✗)

40. [illegible]
41. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
42. ர. வினோஜினி- கொட்டடி நமசிவாய வித்தியாலயம்
43. ஜெ. சயந்தன்- யா/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
44. ச. கலைச்செல்வன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம
45. சி. நிலக்சன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
46. சீ. சுஜீபனா- அச்சுவேலி மத்திய கல்லூரி
47. யோ. ஆரணி- தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
48. பா. துஷாரா- வேலணை நடராஜ வித்தியாலயம்
49. த. சரண்யா- சுன்னாகம் நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
50. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம
51. ச. நந்துஜா- பெரிய புலம் மகாவித்தியாலயம்
52. ச. தனேசன்- திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை
53. யோ. விதுஷ்ஷன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
54. யோ. துஷிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
55. இ. பிரியங்கா- துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
56. ம. நிருபன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
57. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாசாலை
58. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
59. ம. துவாரகன்- உடுவில் மகளிர் கல்லூரி
60. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
61. சி. தேவகி- துன்னாலை மே.மெ.மி.த.க.பாடசாலை
62. ந. சரண்யா- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
63. வே. நிதூஷன்- யா/மத்திய கல்லூரி
64. ம. சரண்யா- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
65. ம. கலைமதி- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
66. கு. கௌதமன்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
67. மு. பிருந்தா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
68. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
69. ஜெ. தாமரா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
70. த. ரூசிகா- இணுவில் மத்திய கல்லூரி
71. ஈ. கோபிதன்- கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
72. இ. கோபிகிருஸ்ணன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
73. த. பிரியங்கா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
74. ஸ்ரீ நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
75. பா. சந்திரா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
76. வி. கல்யாணி- வல்வை றோ.க.த.க. பாடசாலை
77. ம. வித்தியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
78. க. கரிசினி- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
79. வி. துஷ்யந்தன்- நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்
80. ம. சிவறோஷன்- வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
81. தி. உமாசங்கரி- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
82. ஸ்ரீ. கஸ்தூரி- யா/மத்திய கல்லூரி
83. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
84. ச. ஷண்மதுரன்- சுழிபுரம் ஐக்கிய சங்க வைச வித்தியாசாலை
85. அ. ராஜ்ஹரன்- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
86. ஜெ. நிரோஜினா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
87. தி. ஜெனத்குமரன்- கோப்பாய் றோ.க.த.க பாடசாலை
88. ப. பனோஜன்- நீர்வேலி சீ.சீ.த.க. பாடசாலை
89. பே. கரையரசன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
90. க. யசோதரன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
91. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
92. சு. அருளினி- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
93. அ. பிறேமி- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
94. இ. அனோஜிதா- உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை
95. ஜெ. லக்ஷி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
96. யோ. டினோஜன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
97. இ. கஜன்ராஜ்- பூம்புகார் அ.த.க.பாடசாலை
98. சி. டினோஜன்- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
99. ச. அருண்- இணுவில் மத்திய கல்லூரி

154. [illegible]
155. ர. சாம்பவி- சுன்னாகம் இராமநாதன் கல்லூரி
156. சி. தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
157. ஞா. தாரணி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
158. பா. சரூபா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
159. சி. கானமிர்தா- சாவகச்சேரி மகளிர் கல்லூரி
160. த. துஷாந்- யா/ மத்தியகல்லூரி
161. தி. அருந்தசா- விக்னேஸ்வராக்கல்லூரி
162. பு. கிருசா- நவாலி மகாவித்தியாலயம்
163. ச. தர்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
164. இ. சகிலா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
165. தி. கிரிசாந்- வேலணை நடராஜ வித்தியாலயம்
166. செ. அருள்ராஜ்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
167. ச. அனுஷா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
168. ம. பிரவீணா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை
169. செ. கௌதமி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
170. இ. ஸ்ரீவதனா- வேலணை நடராஜ வித்தியாலயம்
171. நே. லாவண்யன்- தாவடி இ.த.க. பாடசாலை
172. கே. சோபனா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
173. க. அனுசியன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
174. த. அனுசா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
175. செ. குயிலினி- வேலணை நடராஜ வித்தியாலயம்
176. ந. நிரோஷன்- தம்பசிட்டி மெ.மி.பாடசாலை
177. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
178. எ. றோயல்ஸொபஸ்ரீபன்- யா/பரியோவான் கல்லூரி
179. சு. பரமதாஸ்- தேவரையாளி இந்துக்கல்லூரி
180. க. விஸ்ணுவர்த்தன்- யா/பரியோவான் கல்லூரி
181. த. சுகன்யா- நல்லூர் ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
182. க. கீர்த்திகா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
183. த. விக்னராஜ்- வல்வை றோ.க.த.க. பாடசாலை
184. பா. டினேஸ்- துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை
185. இ. கிரிசாந்- யா/ மத்திய கல்லூரி
186. சி. காகித்தியன்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
187. ஜெ. பார்த்தீபன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வராக் கல்லூரி
188. கி. அச்சுதன- சாவகச்சேரி- டிறிபேக் கல்லூரி
189. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை
190. தே. வினோகாந்- யா/மத்திய கல்லூரி
191. ம. காவியா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
192. உ. சுகந்தன்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
193. ப. சிவருக்ஷி- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
194. த. மயூரி- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
195. மோ. நிரோஷன் வதிரி- திரு இருதயக் கல்லூரி
196. மு. நிரோஜா- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
197. ஞா. நிவேதிகா- வேலணை நடராஜ வித்தியாலயம்
198. சௌ. லக்சிகா- றோ.க.த.க. பாடசாலை
199. ம. அபிவர்சனி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
200. ச. அனுஷா- சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை
201. அ. தவக்குமார்- அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
202. ந. பரந்தாமன்- யா/மத்திய கல்லூரி
203. கி. ஜனக்ஷன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
204. க. சாரங்கன்- யா/ புனித பத்திரிசியார் கல்லூரி
205. ச. திவிஜன்- உடுவில் மகளிர் கல்லூரி
206. பி. கிசோக்- யா/ இந்து ஆரம்பப் பாடசாலை
207. பா. தேனுஜா- யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
208. செ. தஸ்மளா- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்
209. க. சஜீபன்- கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்
210. கு. சர்மிளா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
211. ச. அபிநயா- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
212 கா. கஜீபன்- நல்லூர் ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலயம்

(தொடர்ச்சி 02 ஆம் பக்கம்)

47. [illegible]
48. மணல் மண்
49 ஆசியா
50. பூ
51. மில்லிமீற்றர்
52. பாடசாலை அதிபர்
53. பாடசாலை கீதம்
54. 3
55. ஒலிம்பிக் தீபம்
56. நீளம் பாய்தல்,குண்டெறிதல்
57. (2) 58. (1) 59. (4)
60. (5) 61. (3) 62. (7)
63. (6) 64. (9) 65. (10)
66. (8) 67. (✓) 68. (✗)
69. (✓) 70. (✓) 71.(✓)
72. (✓)

73.-78. வரையிலான வினாக் களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6 வாக் கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந் தது 4 சொற்களையாவது கொண்டிருத் தல் வேண்டும்.

## குணமாக்கல் வழிபாடு

(சுன்னாகம்)

அருட்தந்தை போல் றொபின்ச னின் குணமாக்கல் வழிபாடு சுன்னா கம் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இன்றும் நாளையும் நடை பெறவுள்ளது. (உ-104)

## நல்லூரில் முதலுதவிக் காரியாலயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி, இலங் கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ் கிளை, முதலுதவிக்காரியாலயம் ஒன்றை ஆலயச் சுற்றாடலில் அமைத்துள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தின் பருத்தித்துறை கிளைத் தலை வர் தவறாஜா தலைமையில் கடந்த 3ஆம் திகதியிலிருந்து இம் முதலுத விக்காரியாலயம் இயங்கி வருகிறது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப் பாய், கோப்பாய், பருத்தித்துறை ஆகிய பிரிவுகளிலுள்ள தொண்டர்கள் இச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். (உ-18)

[illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
[illegible]

## இன்று ஒரு தகவல்

### பெற்றோரும் பிள்ளைகளும்

அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலித்தனமாக இருக்கின்றனர். பொதுவாகப் பல சந்தர்ப்பங்களில் நாம் இதனைப் பார்த்திருக்கின்றோம். இது தொடர்பான ஆய்வொன்று அண்மையில் ஹைதராபாத்தில் நடந்தது. தேசிய மன வளர்ச்சி குன்றியோருக்கான அமைப்பு, தேசிய ஊட்டச்சத்து தொடர்பான அமைப்பு இவையிரண்டும் இணைந்து ஆய்வு நடத்தின. ஹைதராபாத் நகரைச் சுற்றியுள்ள சில கிராமங்களில் இவ் ஆய்வு நடந்தது.

ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள், பெற்றோர்கள் இவர்களையெல்லாம் நேரில் சென்று சந்தித்தனர். புள்ளி விபரங்களையும் சேகரித்தனர். அவற்றைத் தொகுத்துப் பார்க்கும் போது பல உண்மைகள் தெரியவந்தது. 30 வயதுக்குக் குறைவானவர்களை விட 30லிருந்து 50 வயது வரை உள்ளவர்களிடம் புத்திசாலித்தனம் அதிகமாகஉள்ளதாம். 30 வயதிற்கு மேலுள்ளவர்கள் தமது பெற்றோரைவிடவும் அதிக புத்திசாலித்தனத்துடன் உள்ளனராம். 30வயதுக்குக்கீழே இருக்கும் பிள்ளைகளின் புத்திசாலித்தனமும் அவர்களது பெற்றோரின் புத்திசாலித்தனத்துக்குச் சமமாகவே உள்ளதாம்.

இது வரையில் நான் பிள்ளைகள் என்று கூறியதெல்லாம் ஆண்பிள்ளைகள். பெண் பிள்ளைகள் எப்படித்தெரியுமா? 30 வயதுக்குக் குறைவான பெண்களிடம் பெற்றோரை விடக் குறைந்த புத்திசாலித்தனமேயுள்ளதாம். ஓரளவுக்கு நல்ல வருமானம் உள்ள குடும்பம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கெல்லாம் ஆண் பிள்ளையும் சரி, பெண்பிள்ளையும் சரி நல்ல புத்திசாலித்தனத்துடனே உள்ளனர்.

வருவாய் குறைவாக உள்ள குடும்பங்களில் இப்படி இல்லை. அது கொஞ்சம் வித்தியாசப்படுகின்றது. இக் குடும்பங்களில் உள்ள புதல்விகளின் புத்திசாலித்தனம் குறைவாகத்தான் உள்ளதாம். அத்துடன் இன்னுமோர் ஆய்வும் நடந்தது. அதாவது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உயரத்தில் ஏதாவது தொடர்பு உள்ளதா? என்று கண்டு பிடிப்பதற்கான ஆய்வு. பொதுவாக அப்பாக்களை விட மகன்மார் அதிக உயரமாக உள்ளனராம். தாயாரும் மகள்மாரும் கிட்டத்தட்ட சம உயரமாகவே உள்ளனராம். 30லிருந்து 50வயதுவரை உள்ள ஆண்கள் பெற்றோரை விட உயரமாக உள்ளனர். 20 வயதிலிருந்து 30 வயது வரை உள்ள இளைஞர்கள் அவர்களது பெற்றோரின் உயரத்திற்குச் சமமாகவே உள்ளனர். இவைகளே அந்த ஆய்வுகளில் கிடைதத முடிவுகள.

இதைப்படித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் கொஞ்சம் கோபமடைவது போல் தெரிகிறது. ''இது வரைக்கும் நீங்கள் கூறிக்கொண்டு வந்தது 20 வயதுக்கு மேல் உள்ளவர்களைப் பற்றித்தானே. 10வயதுக்குக் கீழே உள்ளவர்களைப் பற்றி எதுவும் கூறவில்லையே''

# குடாநாட்டின் 30 வீத நிலப்பரப்பு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது

## பல்கலை ஊழியர் சங்கம் ஜப்பான் அமைச்சரிடம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஞாயிறன்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்த ஜப்பானிய பிரதி வெளியுறவு அமைச்சர் ரெற்சுரோ ஜானுவிடம் இன்றைய நிலையை விளக்கி, யாழ். பல் கலைக்கழக ஊழியர் சங்கம் சமர்ப்பித்த மகஜரின் விபரம் வருமாறு,

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினராகிய நாம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் சில விடயங்களை தங்கள் முன் வைக்க விரும்புகிறோம். யாழ். மாவட்டத்தின் 30 வீத நிலப்பரப்பு ஸ்ரீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இது தமிழ மக்களின் மரபு வழி தாயகப் பிரதேசமாகும்.

இப்பிரதேசமானது தற்போது உயா பாதுகாப்பு வலயமென ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பெயரிடப்பட்டுள்ளது. இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் தமது உடமைகள், விவசாய நிலங்கள், கடற்றொழில் வளங்கள், பாடசாலைகள், வழிபாட்டு இடங்களுடன் தமது குடியிருப்புக்களையும் இழந்து பிறரது இல்லங்களிலும் நலன்புரி நிலையங்களிலும் அடைக்கலம் தேடியுள்ளனர்.

கரையோரங்கில் வாழும் கடற்றொழிலாளர்கள் தமக்கு விதிக்கப்பட்ட கடுமையான விதிமுறைகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனுமதி அட்டை முறை, நேரக்கட்டுப்பாடு, படகுகளையும் கடற்றொழில் உபகரணங்களையும் சோதனையிடும் நடைமுறை என பல்வேறு விதிமுறைகளை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இத்தொழிலாளர் மீது திணிததுள்ளனர்.

மீள் குடியமர்வையும், புனர்நிர்மாணத்தையும் அமுல் செய்ய, நம்பிக்கையை கட்டியெழுப்புதல் அவசியமாகும். இதில் மிக முக்கியமானது நீண்டகாலமாக துன்பப்படும் மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படுத்துதலாகும். தமிழ் மக்களின ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளின் பெரும்பான்மை பங்களிப்புடன் கூடிய இடைக்கால நிர்வாக அமைபபொன்றை வடக்கு-கிழக்கு மக்களுக்காக ஏற்படுத்துதல் நிரந்தர சமாதானத்துக்கு மிகவும் அவசியமானதாகும்.

நிரந்தர நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் ஜப்பானிய அரசாங்கம் காட்டி வரும் அக்கறையை யிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஜப்பானிய அரசாங்கத்தில் உயர் நிலையிலுள்ள அமைச்சர் என்ற வகையில் மேற்கண்ட உண்மைகள் தங்கள் தயவான கவனத்தைப் பெறும என நம்புகின்றோம் என்றுள்ளது. (உ)

# வடபகுதி வங்கிகள் வழங்கும் விவசாயக் கடன் அளவு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஒன்றரை வருடங்களில் வடபகுதியிலுள்ள அரச வங்கிகள் விவசாயக் கடனாக 2 கோடி 50 இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளன என இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் டபிள்யு. ஏ.சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள அரச வங்கிகளினாலேயே இவ் விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 5கோடி ரூபா விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் இப்பிரதேசங்களில் விவசாய, முதலீட்டு மற்றும் கைந்தொழில் கடன்கள் வழங்கப்படவில்லை.

வடக்கு- கிழக்குப் பகுதி மக்களின் விவசாய மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அரசாங்கம் பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திடவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

### இராசி பலன்

06. 08. 2003
(ஆடி 21, புதன்)

நவமி - மு. இ. 09.36 வரை
விசாகம் - பி.ப. 2.34 வரை
இராகுகாலம் - 12.04 - 01.34
சுபநேரம் - 04.34- 06.04
சித்தாமிர்தம்
மேடம்

# கண்காணிப்புக் குழு இன்று மணலாறு செல்கிறது

(கொழும்பு)

மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பதுங்கு குழிகளை போர்நிறுத்தக் கண்காணிப்

சூரசெனிவிரட்ண கண்காணிப்புக்குழுவினிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் இந்தப் பதுங்கு குழிகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டு

விட மகன்மார் அதிக உயரமாக உள்ளனராம். தாயாரும் மகள்மாரும் கிட்டத்தட்ட சம உயரமாகவே உள்ளனராம். 30லிருந்து 50வயதுவரை உள்ள ஆண்கள் பெற்றோரை விட உயரமாக உள்ளனர். 20 வயதிலிருந்து 30 வயது வரை உள்ள இளைஞர்கள் அவர்களது பெற்றோரின் உயரத்திற்குச் சமமாகவே உள்ளனர். இவைகளே அந்த ஆய்வுகளில் கிடைதத முடிவுகள.

இதைப்படித்துக் கொண்டிருக்கும் சிறுவர்கள் கொஞ்சம் கோபமடைவது போல் தெரிகிறது. ''இது வரைக்கும் நீங்கள் கூறிக்கொண்டு வந்தது 20 வயதுக்கு மேல் உள்ளவர்களைப் பற்றித்தானே. 10வயதுக்குக் கீழே உள்ளவர்களைப் பற்றி எதுவும் கூறவில்லையே'' என்கின்றீர்கள் அப்படித் தானே. [illegible]து தான் ஆரம்பத்திலேயே கூறி விட்டேன். அப்பாவை விட பிள்ளைகள் புத்திசாலி என்று. அது உங்களுக்காகத்தான். உங்களை மாதிரி இரண்டு பிள்ளைகள் என்ன கதைத்தார்கள் தெரியுமா? அவர்கள் இருவருமே கணக்கில் நூறு மார்க் வாங்கியவர்கள். ஒரு சிறுவன் கேட்கிறான் ''நீ எப்படி கணக்கில்100இற்கு 100வாங்கினாய்?'' அதற்கு இவன் ''நான் கணக்கில் சந்தேகம் வந்தால் வீட்டில் எனது அப்பாவிடம் கேட்டுக்கொள்வேன் அது தான் காரணம். அது சரி நீ எப்படி 100இற்கு100மார்க் வாங்கினாய்? என்றான் . அதற்கு அவன ''நான் கணக்கில் சந்தேகம் வந்தால் என் அப்பாவிடம் கேட்பதேயில்லை. அதனால தான் 100இற்கு 100வாங்கனேன்'' என்றான.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உள நோய் மருத்துவ சர்வதேச மாநாடு

## இலங்கையில் 4 தினங்கள்

(கொழும்பு)

உள நோய் மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்று எதிர் வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தின் உள நல, உள நோய் மருத்துவ அமைப்பின் தென்னாசியப் பிரிவு உள நோய் சிகிச்சைச் சங்கத்துடன் இணைந்து இந்த மாநாட்டை நடாத்துகின்றது. இம்மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, மலேசியா, நேபாளம், தாய்லாந்து, புருனே, பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரபல உள நோய் மருத்துவர்களும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகியவற்றின் சில உள நோய் மருத்துவர்களும் இதில் பங்குபற்றவுள்ளனர்.

பேராசிரியர் மோகன் இம்மாநாட்டிற்கு தலைமை தாங்கவுள்ளார்.

மாநாட்டின் இரண்டாம் நாளான 18ஆம்திகதி, மதுப்பாவனைச் சிகிச்சை முறை,சமூக உளவியல், பாகிஸ்தானில் ஹெரோயின் போதைப் பொருள் பாவனை பற்றிய கருத்துரைகள் நடைபெறவுள்ளன.

பேராசிரியர் மோகன், டாக்டர் சிவகுமார், டாக்டர் ஜெரமிகோல்ட் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இறுதி நாளான 20ஆம்திகதி இடம பெறவுள்ள வயது முதிர்ந்தவர்களுக்கான உள நோய் பற்றிய கருத்தரங்கில் பிரிட்டனைச் சேர்ந்த டாக்டர்கள் ப.ஹெட்டியாராச்சி, எஸ்.தேவகுமார், இந்தியாவினைச் சேர்ந்த டாக்டர் மோகனதாஸ், பேராசிரியர் சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இலங்கையைச்சேர்ந்த டாக்டர் ரொட்றிகோ இலங்கையில் உள நல சேவை நிலையங்களை விருத்து செய்வது பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். (உ)

## இராசி பலன்

**06. 08. 2003**

**(ஆடி 21, புதன்)**

நவமி - மு. இ. 09.36 வரை
விசாகம் - பி.ப. 2.34 வரை
இராகுகாலம் - 12.04 - 01.34
சுபநேரம் - 04.34- 06.04

சித்தாமிர்தம்

**மேடம்**
அஜீரணக் கோளாறு, பொருள் நாசம், வீண் கலகம், காரிய தடங்கல்.

**இடபம்**
ஸ்திரீ சௌக்கியம், தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி, புதிய பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
விரும்பிய பொருள்கிடைக்கும் வாய்ப்பு, நோய் குணமடைதல், புதிய சிந்தை, மன மகிழ்ச்சி.

**கடகம்**
குடும்பத்தில் விவாதம், காரிய இடையுறு, தொழில் ஈடுபாடு, மனப்பதட்டம்.

**சிங்கம்**
தன்னம்பிக்கைக்குறைவு, தனவிரயம், காரிய தாமதம், சோம்பல்.

**கன்னி**
மனோதைரியம், நற்கீர்த்தி, இஷ்டமான பேச்சு, புதிய பொருள்சேர்க்கை.

**துலாம்**
போசன சுகக்குறைவு, வீண் செலவு, பெரியோர் வெறுப்பு, ரோக நிலை.

**விருச்சிகம்**
வெகுமானம், பிறர் ஒத்துழைப்பு, முயற்சி கைகூடும், கற்பனை மிகுதி.

**தனுசு**
கீழ்ப்படிவு, ஆழ்ந்த சிந்தை, காரிய தாமதம், வேலையில் ஆர்வம்.

**மகரம்**
தெய்வ சிந்தை, போசன சுகம், காரிய அனுகூலம், நல்ல வருமானம்.

**கும்பம்**
நன்கொடை, இஷ்டசித்தி, ஆரோக்கியம், மேன்மை.

**மீனம்**
தேசாந்திர வாசம், எதிர் பாராத செலவு, சீரப் பிரயாசை, வயிற்றுவலி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

அவா மேலும் தெரிவித்துள்ளார்.(தி)

# கண்காணிப்புக் குழு இன்று மணலாறு செல்கிறது

(கொழும்பு)

மணலாறு பகுதியில் விடுதலைப் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் பதுங்கு குழிகளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று பார்வையிடவுள்ளதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உபதலைவர் தெரிவித்துள்ளார்.

மணலாறு பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் விடுதலைப்புலிகள் பதுங்கு குழிகளை அமைத்துவருவதாக படை அதிகாரிகளுக்கான இயக்குநர் மேஜர் சூரசெனிவிரட்ண கண்காணிப்புக்குழுவினரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

விடுதலைப்புலிகளின் இந்தப் பதுங்கு குழிகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்தே தாம் அப்பகுதியை பார்வையிடவிருப்பதாகவும், கிண்ணியா குரங்குப்பாஞ்சான் முகாம் விவகாரம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திக்க விருப்பதாகவும் கூறியுள்ளனர். (உ-08)

# காக்கைதீவு மா.கிராமத்திற்கு மின்சாரம் வழங்க வற்புறுத்து

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள காக்கைதீவு மாதிரிக் கிராமத்திற்கு விரைவில் மின்சாரம் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி,வலி.தென்மேற்கு பரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் இலங்கை மின்சாரசபையன் பிரதிபொதுமுகாமையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை சென்ற வாரம அனுப்பிவைத்துள்ளார்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பிரதேச சபையின் மேற்படி மின் விநியோகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மூன்று தடவைகளில் ரூபா 7 இலட்சத்து 50 ஆயிரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும, மிகுதிசிறு தொகை விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் படுவதாகவும் தெரிவித்துள்ள விக்டா, அம்மக்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யுமாறும் கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் பிராந்திய உளளூராட்சி ஆணையாளருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர்க்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (பி-252)

# தேர்தல் வன்முறைகளில் பாதிக்கப்பட்ட அனைவர்க்கும் காணி வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

உடத்தலவின்ன சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாத்திரம் காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுத்தமை அநீதியானது.

இவ்வாறு கண்டனம் தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வழக்கறிஞர் சங்கம் பிரதமருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடித்தில், மேற்படி செயலானது தேர்தல் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட ஏனையோரின் உரிமைகளை மீறுவதாகவுள்ளது.

ஸ்ரீ . சு.க., பொ. ஐ.மு. ஆதரவாளர்களிற்கு இழைக்கப்படும் அநீதி இது.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களால் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் அனைத்திற்கும் காணிகளைப் பெற்றுக்கொடுப்பது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# அயோத்தி விடயத்தில் நிர்ப்பந்தம் ஏற்பட்டால் பதவி விலகுவேன்!

## இந்தியப் பிரதமர் அறிவிப்பு

(புதுடில்லி)

அயோத்திப் பிரச்சினையில் தனக்கு எவ்வித நிர்ப்பந்தமும் இல்லை. அதுபோன்ற நிர்ப்பந்தம் இருப்பதாக தான் கருதினால் அன்றைய தினமே தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு ஆட்சியை விட்டு வெளியேறுவார் என்று பிரதமர் வாஜ்பாய் உறுதி படக்கூறியுள்ளார்.

மக்களவையில் நேற்று முன் தினம் அயோத்திப் பிரச்சினையில் பிரதமர் வாஜ்பாய் விளக்கமளிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதிலளித்துப் பேசிய வாஜ்பாய் இவ்வாறு கூறினார்.

அயோத்திப் பிரச்சினையில் பிரதமர் வாஜ்பாய் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கும் கடந்த சில தினங்களுக்கு முன்பு இராமச்சந்திர பரமஹன்ஸ் இறுதிச் சடங்கில் பங்கேற்றபோது இராமர் கோயில் கட்டியே தீருவோம் என வாஜ்பாய் கூறியதற்கும் எதிர்க்கட்சிகள் கண்டனம் வெளியிட்டன.

எதிர்க்கட்சிகள் மட்டுமல்லாது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றுள்ள தி.மு.க. தெலுங்கு தேசம் போன்ற கட்சிகளும் வாஜ்பாயின் அறிவிப்புக்கு எதிர்ப்புக் காட்டின.


இந்நிலையில் மக்களவையில் இன்று எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பிரதமர் வாஜ்பாய் பதிலளித்துப் பேசினார்.

அயோத்தியில் வலுக்கட்டாயமாக இராமர் கோயில் கட்டியே தீருவோம் என்று தான் குறிப்பிடவில்லை என விளக்கமளித்த வாஜபாய் நீதிமன்றம் வெளியிடும் தீர்ப்பின் அடிப்படையிலோ அல்லது பேச்சுவார்த்தை மூலமாகவோ அயோத்திப் பிரச்சினையை தீர்க்கலாம் என்றுதான் குறிப்பிட்டேன் என்றார்.

தான் பேசிய அந்தப் பேச்சில் எந்தவித தவறும் இல்லை. அதே நேரத்தில் அரசின் நிலையிலும் மாற்றம் ஏதும் இல்லை, என்று மீண்டும் ஒருமுறை வாஜ்பாய் தெளிவுபடுத்தினார்.

மறைந்த பரமஹன்ஸின் இராமர் கோயில் கட்டவேண்டும் என்ற ஆசை நிறைவேற்றப்படும் என்று தான் குறிப்பிட்டதாகவும் வாஜ்பாய் தெரிவித்தார்.

துறவியான பரமஹன்ஸின் இறுதிச் சடங்கில் பேருரையா



நிகழ்த்த முடியும்? எனவே தான் அயோத்தி குறித்து ஓரிரு வார்த்தைகளில் த்தான் பேசியதாகவும் அதனை வேறு மாதிரியாக ஊடகங்கள் வெளியிட்டதாகவும் வாஜபாய் கூறினார்.

வாஜபாயின் இந்தப் பதிலை ஏற்றுக்கொள்ள மறுத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினார்கள். இதனால் அவையில் சிறிது நேரம் கூச்சல்-குழப்பம் நிலவியது. இதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர். (பி)

மெக்சிக்கோ பொறியியல் மாணவர் ஒருவர் தனது கையில் அணிந்திருப்பது நவீன மின்னணு கையுறை. இதை அணிந்து கொண்டு சைகை காட்டினால் சைகையைப் பேச்சாகவும் எழுத்தாகவும் இந்த நவீன கையுறை வெளிப்படுத்தும்.



## மத்தியகிழக்கு போர் நிறுத்தத்தை மீறப்போவதாக அல் – அக்ஷாத் அறிவிப்பு

(ரெல்அவிவ்)

மத்தியகிழக்கில் 3 மாத காலமாக நிலவி வரும் போர் நிறுத்தத்தை மீறவுள்ளதாக பலஸ்தீனத் தீவிரவாத இயக்கமொன்று தெரிவித்துள்ளது.

அல்-அக்ஷாத் தற்கொலைப் படைப்பிரிவே இவ்வாறு அபாய எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர் இஸ்ரேலியத் துருப்புக்களை சுட்டுக்கொல்லப்பட்டதற்கு எதிர்த் தாக்குதல் நடத்தவுள்ளதாக அவ்வியக்கம் அறிவித்துள்ளது.

மேற்குக்கரைப் பகுதியிலுள்ள துல்கம் நகரில் உள்ள இத் தீவிரவாதக்குழுத் தலைவர் இந்த எச்சரிக்கையை விடுத்தபோதும் ஏனைய தீவிரவாதக் குழுக்கள் போர் நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதாக தெரிவிக்கின்றன. (பி)

WORLD NEWS உலக தரிசனம்

# காஷ்மீரின் பெரும்பகுதியை இந்தியா விட்டுக்கொடுக்கவேண்டும்

## பாக்.பிரதமர் கூறுகிறார்

(லண்டன்)

இந்தியா-பகிஸ்தானிடையே முக்கிய பிரச்சினையாக இருப்பது காஷ்மீர்தான். காஷ்மீரின் பெரும் பகுதியை இந்தியாதான் ஆக்கிரமித்திருக்கிறது. இராணுவ பலத்திலும் பிறவகையிலும் அதுதான் பெரிய நாடாக இருக்கிறது. எனவே அதிகம் விட்டுத் தருவதன் மூலமும், அதிகம் சலுகை காட்டுவதன் மூலமும் இனப்பிரச்சினையை இந்தியா எளிதாகத் தீர்த்து விடலாம் என்று பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

'ஆப்-கி-பாத்; பிபிசி-கி-சாத்' என்ற பேட்டி நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பேசிய


தில் தீர்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடமுடியாது. நம் காலத்திலேயே இதற்குத் தீர்வு கண்டாக வேண்டும்.

இரு தரப்பிலும் உறவுகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன. இரு நாடுகளும் இப்போது தூதர்களை நியமித்து விட்டன. கடந்த 2 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு நாடுகளிலும் தூதர்கள் இருப்பதே பெரிய சாதனைதான்.

இஸ்லாமபாத்தில் அடுத்த ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியா முன்வந்திருப்பது அடுத்த ஆக்கபூர்வ நடவடிக்கையாகும். இதை நாங்கள் மனப்பூர்வமாக

அதற்கு முன்னதாகக்கூட சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. வாஜ்பாய் என்னை விட வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர். அவர் அழைத்தால் அவர் எங்கு வரச் சொல்கிறாரோ அங்கே வந்து பேச நான் தயாராக இருக்கிறேன். பெரியவர்கள் தான் சிறியவர்களுக்கு கட்டளையிட வேண்டும். எனவே அவருடைய அழைப்புக்காகக் காத்திருக்கிறேன். வாஜ்பாய் நல்லவர் பக்குவமான ராஜதந்திரி. அவருடன் பேசுவதற்கு எனக்கு பிரச்சினை ஏதும் இராது என்றே நினைக்கிறேன்.

இரு தரப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற தவிப்



கின்றது என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல. அல்கெய்டா கட்டமைப்பு ஆப்கானிஸ்தானில் தான்

### நக்கீரன் கோபாலின் பிணைமனு தள்ளுபடி

(சென்னை)

பொடாச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுள்ள நக்கீரன் கோபாலின் பிணைமனுவை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பிரபல பத்திரிகை ஆசிரியரான நக்கீரன் கோபாலை தமிழக அரசு கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி கைது செய்தது.

சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாக கூறி அவரைக் கைது செய்த தமிழகப் பொலிஸார் அவர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்திருந்தமையும் தெரிந்ததே. (பி-2)

### 70 வயதில் 4வது திருமணம்

(கெய்ரோ)

எகிப்தில் 70 வயது முதியவர்

(லண்டன்)

இந்தியா-பகிஸ்தானிடையே முக்கிய பிரச்சினையாக இருப்பது காஷ்மீர்தான். காஷ்மீரின் பெரும் பகுதியை இந்தியாதான் ஆக்கிரமித்திருக்கிறது. இராணுவ பலத்திலும் பிறவகையிலும் அதுதான் பெரிய நாடாக இருக்கிறது. எனவே அதிகம் விட்டுத் தருவதன் மூலமும், அதிகம் சலுகை காட்டுவதன் மூலமும் இனப்பிரச்சினையை இந்தியா எளிதாகத் தீர்த்து விடலாம் என்று பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

'ஆப்-கி-பாத்; பிபிசி-கி-சாத்' என்ற பேட்டி நிகழ்ச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பேசிய ஜமாலி இக்கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

அப்பேட்டியில் ஜமாலி மேலும் கூறியதாவது,

'இரு தரப்புப் பிரச்சினைகள் சுமுகமாக முடிய இந்தியாதான் விட்டுத் தரவேண்டும். எத்தனை சலுகைகளை அளிக்க இந்தியா தயார் என்று தெரியவில்லை; அதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். 50 ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் காஷ்மீர் பிரச்சினையை இனி எதிர்காலத்தில் தீர்த்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடமுடியாது. நம் காலத்திலேயே இதற்குத் தீர்வு கண்டாக வேண்டும்.

இரு தரப்பிலும் உறவுகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன. இரு நாடுகளும் இப்போது தூதர்களை நியமித்து விட்டன. கடந்த 2 ஆண்டுகளுக்குப் பின்னர் இரு நாடுகளிலும் தூதர்கள் இருப்பதே பெரிய சாதனைதான்.


இஸ்லாமபாத்தில் அடுத்த ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்தியா முன்வந்திருப்பது அடுத்த ஆக்கபூர்வ நடவடிக்கையாகும். இதை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

இதையே ஆதாரமாக வைத்து விளையாட்டு, பொருளாதாரம், சுற்றுலா, பொதுமக்களிடையே நேரடித் தொடர்பு, விசா வழங்கல் ஆகியவை தொடர்பாகவும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இரு தரப்பும் எடுக்கவேண்டும் என்று விரும்புகிறோம்.

சார்க் உச்சிமாநாட்டுக்கு முன்னதாகக்கூட பிரதமர் வாஜ்பாயை சர்வதேச அரங்கில் நாங்கள் சந்தித்துப்பேசும் வாய்ப்பு இருக்கிறது. அதற்கு முன்னதாகக்கூட சந்திக்கும் வாய்ப்பு உள்ளது. வாஜ்பாய் என்னை விட வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர். அவர் அழைத்தால் அவர் எங்கு வரச் சொல்கிறாரோ அங்கே வந்து பேச நான் தயாராக இருக்கிறேன். பெரியவர்கள் தான் சிறியவர்களுக்கு கட்டளையிட வேண்டும். எனவே அவருடைய அழைப்புக்காகக் காத்திருக்கிறேன். வாஜ்பாய் நல்லவர் பக்குவமான ராஜதந்திரி. அவருடன் பேசுவதற்கு எனக்கு பிரச்சினை ஏதும் இராது என்றே நினைக்கிறேன்.

இரு தரப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்ற தவிப்பும், வெற்றிபெறவேண்டும் என்ற ஆர்வமும் எனக்கு இருக்கிறது. வாஜ்பாயும் அப்படிப்பட்ட மன நிலையில் தான் இருக்கிறார். அல்லாவின் பேரருளால் சுமூகமாக இப்பிரச்சினை தீரும் என்று நம்புகிறேன். ஐக்கிய நாடுகள் சபையில் காஷ்மீர் தொடர்பாக இயற்றப்பட்ட தீர்மானத்தை அமுல் படுத்தினால் மிகவும் மகிழ்ச்சியுடன் அதை வரவேற்பேன்.

பாகிஸ்தான் தான் பயங்கரவாதத்தின் மையமாக செயற்படு



கின்றது என்ற குற்றச்சாட்டு உண்மையல்ல. அல்கெய்டா கட்டமைப்பு ஆப்கானிஸ்தானில் தான் மையம் கொண்டிருந்தது. அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் எல்லை தாண்டி பாகிஸ்தானிற்கு வந்த போது உடனே அவர்களைப் பிடித்து அமெரிக்காவிடம் ஒப்படைத்து விட்டோம். காஷ்மீர் தீவிரவாதக் குழுக்களுக்கு பாகிஸ்தானில் அலுவலகம் ஏதும் கிடையாது. இருந்தவற்றையெல்லாம் பூட்டிச் சீல்வைத்துவிட்டோம் என்றார் ஜமாலி. (பி)

லின் பிணைமனுவை பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

பிரபல பத்திரிகை ஆசிரியரான நக்கீரன் கோபாலை தமிழக அரசு கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி கைது செய்தது.

சட்டவிரோதமாக துப்பாக்கி வைத்திருந்ததாக கூறி அவரைக் கைது செய்த தமிழகப் பொலிஸார் அவர் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்திருந்தமையும் தெரிந்ததே. (பி-2)

## 70 வயதில் 4வது திருமணம்

(கெய்ரோ)

எகிப்தில் 70 வயது முதியவர் 12 வயது சிறுமியைத் திருமணம் செய்துகொண்டுள்ளார். இச்சிறுமி அவருக்கு நாலாவது மனைவி.

திருமணத்திற்கு நண்பர்களும் உறவினர்களும் திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர்.

'பலதார மணத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர் நான், சந்தோஷமாக இருக்கிறேன்' என்று அந்த முதியவர் கூறினார். (பி)

# இஸ்ரேல் வெளியிட்டிருக்கும் பலஸ்தீன கைதிகளின் பட்டியலுக்கு கடும் எதிர்ப்பு

(ரெல்அவிவ்)

விடுவிக்கப்படவுள்ள பலஸ்தீன கைதிகள் தொடர்பாக இஸ்ரேல் வெளியிட்டுள்ள பட்டியலுக்கு பலஸ்தீனியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா ஆதரவில் சமாதான முயற்சிகளை ஊக்குவிக்கவென 540 கைதிகளை விடுவிக்கவுள்ளதாக தெரிவித்திருந்த இஸ்ரேல், இவர்களில் 342 பேரின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியல் தொடர்பாகவே பலஸ்தீனர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றனர்.

இஸ்ரேலியர்கள் வசம் இருக்கின்ற பலஸ்தீனக் கைதிகள் 6 ஆயிரம் பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று பலஸ்தீனர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இஸ்ரேல் வெளியிட்டுள்ள இப்பட்டியல் ஓர் ஏமாற்றுவித்தை என்று தெரிவித்துள்ள பலஸ்தீன பாதுகாப்பு அமைச்சர் மொகமட் ரெஹிலான் இது சமாதான முன்னெடுப்புக்களை மேலும் சிக்கலாக்கும் எனவும் தெரிவித்துள்ளார். (பி-2)

# இந்தியாவில் பசுவதையைத் தடுக்கும் சட்டம் வருகின்றது

(சென்னை)


பசுவதையைத் தடைசெய்யும் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தின் நடப்புச் சட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

வேளாண்துறை அமைச்சர் ராஜ்னாசிங் மக்களவையில் இதனைத் தெரிவித்தார்.

பசுவதையைத் தடைசெய்ய மாநிலங்களுக்கிடையே பசுக்களைக் கடத்துவதை நிறுத்தவும் யோசனை தெரிவித்து தேசிய கால்நடைக்குழு முறையீட்டு மனுவொன்றை சமர்ப்பித்துள்ளது.

இக்குழுவின் பரிந்துரைகள் சட்ட அமைச்சகத்தில் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இக்கொடுமையை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு விரும்பினாலும் பிற மாநிலங்களுக்கு பசுக்களைக் கடத்துவதைத் தடுப்பதே மாநில அரசுகளின் பொறுப்பு என ராஜ்னாசிங் கூறியுள்ளார். (பி-2)



சென்னைத் தீவுத்திடலில் இந்திய நுகர்வோர் கண்காட்சி நுழைவு வாயிலில் உள்ள கேக்கினாலான பைசா கோபுரம். இதன் உயரம் 8 அடி, எடை 350 கிலோ. ஹைதராபாத்தைச் சேர்ந்த சுவிஸ்கேசில் சுகர் கிராப்ட்ஸ் நிறுவனம் இதை வடிவமைத்துள்ளது.

கெடுங்காலை கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்
– குறள்

# வலம்புரி

## தந்தையின் பாதையில் தனையன்

இலங்கையில் இனப்பிரச்சினை ஏற்படுவதற்கு முக்கிய சூத்திரதாரிகளாக இருந்த சிங்களத் தலைவர்கள் இருவர். அவர்களில் ஒருவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மற்றையவர், எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா. இவ்விரு தலைவர்களும் உயர்ந்த சிந்தனையில் செயற்பட்டிருப்பார்களாயின் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு இடம் இருந்திருக்காது.

தமிழ்த் தலைவர்களுடன் சமாதான வழியில் பேசி தமிழர்களின் உரிமையை உறுதிப்படுத்தியிருந்தால் இன்றைய அவல நிலை உருவாகியிராது.

இததகையதொரு சிந்தனை பண்டாரநாயக்காவுக்கு ஏற்பட்ட போது அவர் தந்தை செல்வநாயகத்துடன் சேர்ந்து பண்டா-செல்வா ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். அவ் ஒப்பந்தம் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்குமாயின் இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தமும் கண்காணிப்புக் குழுவும் தேவையற்றதாகியிருக்கும்.

ஆனால், அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த விடாமல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பாதயாத்திரை போனார். இதனால் கடுப்பேறிப்போன பண்டாரநாயக்கா 'நீ ஒரு அடி பாய்ந்தால் நான் இரண்டு அடி பாய்வேன்' என நிரூபித்துக் காட்ட முற்பட்டு சிங்கள மொழியை அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தினார். இதனால் இனவாதத்தீ நாட்டில் மூளத்தொடங்கியது. ஜே.ஆர்.எள்ளென்றால் பண்டா எண்ணெய் என்பது போல ஒருவர் மாறி ஒருவர் தங்கள் அரசியல் செல்வாக்கை வலுப்படுத்தத் தமிழர்களின் உயிரைக் குடித்தனர். அதன்

# குரங்குப்பாஞ்சானை விட்டு ஓரங்குலம் கூட நகர நாம் தயாரில்லை! அது எமது சொந்த மண்!

## தென்தமிழீழ பயணத்தை முடித்துக்கொண்டு வன்னிதிரும்பிய தமிழ்ச்செல்வன் அழுத்தந்திருத்தமாகத் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு தென் தமிழீழ மக்கள் தமது உணர்வுகளையும் உறுதிப்பாடுகளையும் ஆதரவுகளையும் தெரிவித்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்திற்கான அரசியல் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்றுமுன்தினம் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியைச் சென்றடைந்த தமிழ்ச்செல்வன் தமது விஜயம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கூறுகையில், தென்தமிழீழத்திற்கான எனது பயணம் தேசியத் தலைவரின் பணிப்பின் பேரிலேயே அமைந்தது. தற்போதுள்ள சமாதான முயற்சிகள் காரணமாக ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாக தென்தமிழீழத்தில் உள்ள தளபதிகள், போராளிகள், மக்களுடன் கலந்துரையாடினேன்.

தென்தமிழீழ மக்கள் எமது தலைவருக்குப் பல விடயங்களைக் என்னூடாகக் கூறியுள்ளனர்.

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பாகக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. நாம் காலம் காலமாக வாழும் இடம அது. பலஆண்டுகளாக அங்கு எமது போராளிகள் தளம் அமைத்துள்ளனர்.


எமது விடுதலைப் போராட்டத்தில் தம் உயிரை அர்ப்பணித்த மாவீரர்களின் வித்துடல்கள்கூட அங்கு விதைக்கப்பட்டிருக்கின்றன. அது எமது பிரதேசம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை போராளிகள் கொண்டுள்ளனர்.

குரங்குப்பாஞ்சானிலிருந்து நாம் சற்றும் நகரத் தேவையில்லை. அரசாங்கமும், படையினரும் இவ்விடயத்தினைப பெரிதுபடுத்தி சமாதானத்தைக் குழப்பமுயல்கின்றனர்.

குரங்குப்பாஞ்சான் எமது பிரதேசம் என ஏற்கனவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், படைத்தரப்பிற்கும் எமது தளபதிகள் விளக்கம் அளித்திருந்தனர்.

தென்தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் நாம் எங்கு சென்றாலும் மக்கள் முழுஅளவில் திரண்டனர்.

எம் தலைவரையும் எமது விடுதலைப்போராட்டத்தையும் வாழ்த்துவதிலும் ஒன்றுதிரண்டு எமது தலைமைக்குப் பின்நின்று போராடி தமிழர் தாயாகப் பிரதேசத்தில் ஒரு உறுதியான சமாதானத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற விருப்புடனும், எல்லோரும் முழுஅளவில்



தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்றார்.

(உ-8)

# விடுதலைப்புலிகள் போரை விரும்பவில்லை

## சமாதானத்தை விரும்புகிறார்கள்!

### மன்னார் அரசியல் பொறுப்பாளர் அமுதா

(மன்னார்)

தற்போதைய சமாதான சூழ்நிலையில தமிழீழ விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக சமாதானத்தையே விரும்புகிறார்கள. அவர்கள் யுத்தத்தை விரும்பவில்லை என்று மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதா தெரிவித்துள்ளார்.

மன்னார் வாழ்வோதய மண்டபத்தில் அதன் தலைவர் அருட்தந்தை யேசுராசா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற "சமாதானத்திற்கான தரிசனநோக்கு" என்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் அரசின் அண்மைக்கால சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அதன் நிலைப்பாடு குறித்தும் கலந்துரையாடல் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் அமுதா, மன்னார் மாவட்ட ஆயர் அதி வணக்கத்திற்குரிய இராஜப்பு ஜோசப் பிரதமரின் சமாதான செயலணியைச் சேர்ந்த தேவநேசன் நேசையா, மன்னார் மாவட்ட அரச அதிபர் எஸ்.விஸ்வலிங்கம் மற்றும் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் நிக்கிலஸ் பிள்ளை உட்பட பலர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

(ம)

# தண்டப்பணம் அறவீடு

(ஏழாலை)

கடந்தவாரம் அச்சுவேலி வடக்கில் சட்டவிரோதமான முறையில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்று வந்த 8 பேர் அச்சுவேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப் பட்ட போது, அவர்களிடம் இருந்து தலா 6ஆயிரம் ரூபா வீதம் 48ஆயிரம் ரூபா தண்டப்பணமாக மல்லாகம் நீதி மன்றினால் அறவிடப் பட்டுள்ளது.

(உ-12)

# பாடசாலையில் 3 ஆம் தவணை பகிஷ்கரிப்புப் போராட்டம்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மூன்றாம தவணை ஆரம்பம முதல தொடர்ந்து நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை வகுப்புக்களை பகிஷ்கரிக்கப் போவதாக யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நேற்று முன்தினம் சங்க அங்குராார்ப்பணக் கூட்டம், யாழ்ப்பாணம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிரநதர நியமனக் கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்படவுள்ள தமது போராட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

(இ)

# மனநோயாளர் விடுதி

# மலசலகூடம் சேகும்

தத்தை நடைமுறைப்படுத்த விடாமல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பாதயாத்திரை போனார். இதனால் கடுப்பேறிப்போன பண்டாரநாயக்கா 'நீ ஒரு அடி பாய்ந்தால் நான் இரண்டு அடி பாய்வேன்' என நிரூபித்துக் காட்ட முற்பட்டு சிங்கள மொழியை அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தினார். இதனால் இனவாதத்தீ நாட்டில் மூளத்தொடங்கியது. ஜே.ஆர்.எள்ளென்றால் பண்டா எணணெய் என்பது போல ஒருவர் மாறி ஒருவர் தங்கள் அரசியல் செல்வாக்கை வலுப்படுத்தத் தமிழர்களின் உயிரைக் குடித்தனர். அதன் வெளிப்பாடாகவே இன்று இலங்கைத் தீவு முழுவதும் இனவாதத்தீ பரவி எரிகிறது. இந்நிலையில் இனிமேலாவது இனவாதத்தை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை நிலை நிறுத்த சமகால அரசியல் வாதிகள் முன்வருவார்கள் என எதிர்பார்த்தால் அதுவும் நடப்பதாக இல்லை.

பண்டாரநாயக்காவின் அருமை மைந்தர் அனுரா பண்டாரநாயக்கா எப்படியும் சமாதான முயற்சியைக் குழப்புவதென திடசங்கற்பம் பூண்டுள்ளார்.

அதற்காக உயிரைக் கொடுத்தும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர வேண்டும் என மிக உணர்ச்சி பூர்வமாகக் கூறியுள்ளார். உயிரைக் கொடுத்தேனும் ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டுச்சேர வேண்டும் எனக் கூறியதன் பொருள், உயிரைக் கொடுத்தேனும் இடைக்கால நிர்வாக சபையைத் தடுப்பதேயாகும். அவ்வாறு இடைக்கால நிர்வாக சபை தடுக்கப்படுமாயின் அதன் முடிவு சமாதான முயற்சி குழப்பமடைவதாகவும் மீண்டும் யுத்தம் ஆரம்பிப்பதுமாகவே இருக்கும்.

# அறவீடு

(ஏழாலை)

கடந்தவாரம் அச்சுவேலி வடக்கில் சட்டவிரோதமான முறையில் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்று வந்த 8 பேர் அச்சுசேலி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்ட போது, அவர்களிடம் இருந்து தலா 6ஆயிரம் ரூபா வீதம் 48ஆயிரம் ரூபா தண்டப்பணமாக மல்லாகம் நீதி மன்றினால் அறவிடப்பட்டுள்ளது.

(உ-12)

விரும்பவில்லை என்று மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதா தெரிவித்துள்ளார்.

மன்னார் வாழ்வோதய மண்டபத்தில் அதன் தலைவர் அருட்தந்தை யேசுராசா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ''சமாதானத்திற்கான தரிசனநோக்கு'' என்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமுதா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் அரசின் அண்மைக்கால சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் அதன் நிலைப்பாடு

குரிய இராஜப்பு ஜோசப் பிரதமரின் சமாதான செயலணியைச் சேர்ந்த

தரங்கில் கலந்துகொண்டனர்.

(ம)

# மனநோயாளர் விடுதி மலசலகூடம் சேதம்

(ஏழாலை)

தெல்லிப்பழை வைத்தியசாலை மனநோயாளர் விடுதி மலசலகூடம் ஆகியன சேதமடைந்த நிலையில் இருப்பதனால் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை தற்பொழுது தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்ற நிலையில், மனநோயாளர் விடுதிக்கான மலசலகூடமும் குழியும் மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் நோயாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதுடன, பெரும் சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது.

இதேவேளை, இந்த மலசலகூடத்தை திருத்திப் புனரமைக்க தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது நிதியில் இருந்து 50ஆயிரம் ரூபா பணத்தை ஒதுக்கித் தருவதாக உறுதியளித்து இருந்தும் இதுவரை அப்பணமும் வந்துசேரவில்லை எனவும் இதனால் திருத்தவேலைகள் செய்யமுடியாத நிலையில் இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-12)

## தினசரி தியானம்

### நேசம்

அனைவரையும் நேசியுங்கள். ஏனெனில் உங்களுக்குள் இருக்கின்ற இறைவன் எல்லோரிடத்தும் உள்ளான். நேசிக்கும் சிறந்த பண்பு இன்று மக்களிடத்தில் இல்லை. உங்களது நண்பர்களையே நீங்கள் நேசிப்பதில்லை. ஒரு சிலரை நீங்கள் நேசிக்கின்றீர்கள் என்றால் அவரால் உங்களுக்குப் பலன் இருக்கின் றது என்பது காரணம். ஆகவே உங்கள்நேசம்சுயநலத்தை அடிப் படையாகக் கொண்டது. இது நேசம் அல்ல. ஒருசிலரை மட்டும் அல்லாமல் மனித சமுதாயம் முழுவதையும் நேசியுங்கள். ஏனென் றால் இறைவன் எல்லோரது உள்ளங்களிலும் வசிக்கின்றார். அப்போதுதான் உங்கள்மனம் இறைவனை உணரும் வகையில் விசாலமடையும்.

**சுவாமி சிவானந்தர்**

# பாடசாலையில் 3 ஆம் தவணை பகிஷ்கரிப்புப் போராட்டம்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் மூன்றாம தவணை ஆரம்பம முதல தொடர்ந்து நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை வகுப்புக்களை பகிஷ்கரிக்கப் போவதாக யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.

நேற்று முன்தினம் சங்க அங்குராார்ப்பணக் கூட்டம், யாழ்ப்பாணம் உயர்கல்வி நிலையத்தில் நடைபெற்றபோதே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிரநதர நியமனக் கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்படவுள்ள தமது போராட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர்.

(இ)

# திருமலை இறங்குதுறைப் பகுதியூடாக பயணம்செய்யப் படையினர் தடை

(திருகோணமலை)

திருகோணமலைப் பயணிகள் இறங்குதுறைப் பகுதியூடாக பயணத்தை மேற்கொள்வதில் படையினரது உயர்பாதுகாப்பு வலயம் பெரும் சிரமங்களை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

திருகோணமலை பயணிகள் இறங்குதுறையிலிருந்து மூதூருக்குச்செல்லும் பயணிகளின் படகுகள் முன்னரைப்போன்று நேரடியாகச் செல்வதற்குப் படையினர் உயர்பாதுகாப்பு வலயத்தைக் காரணங்காட்டி தடைவிதித்துள்ளனர்.

இதன்காரணமாக திருகோணமலை துறைமுகத்திலிருந்து புறப்படும் பயணிகளின் படகுகள் பாறைகள் நிறைந்துள்ள சுற்றுப்பாதைகளின் ஊடாகவே செல்லவேண்டிய நிலை உள்ளது.

இதனால் மேலதிகமாக 30நிமிடங்கள் பயணம் செய்யவேண்டியிருப்பதாகவும், பயணத்தின்போது விபத்துக்களும் ஏற்படுவதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

(உ-08)

# போஷாக்குக் குறைந்த சிறுவருக்கு சோயா மா

## யுனிசெவ் ஆதரவில் ஏற்பாடு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஐந்து வயதிற்குட்பட்ட போஷாக்கு குறைந்த சிறுவர்களிற்கு சோயாமா வழங்கப்படவுள்ளது.

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஒவ்வோர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிற்கும் இவ்வாரம்முதல் இந்த மாவிநியோகம் நடக்கவிருப்பதாகவும் இவை விரைவில் குழந்தைகள் நல சிகிச்சை நிலையத்தில் வைத்து விநியோகிக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கொழும்பிலிருந்து சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்படும் திரிபோஷா மா குறைந்தளவில் மட்டும் வருவதால் அவை மூன்று வயதிற்குட்பட்ட நிறை குறைந்த பிள்ளைகளுக்கும் கற்பவதி தாய்மார்களுக்கும் மட்டுமே சிகிச்சை நிலையங்களில் வைத்து வழங்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

(பி-252)

# அரும்பொருள் பாதுகாப்பு நடுவப்பணியகம் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ அரும்பொருள் பாதுகாப்பு நடுவப்பணியகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு, நேற்று முற்பகல் 9.30 மணிக்கு, கிளிநொச்சியிலுள்ள தூயவன் அரசறிவியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன், யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோா சிறப்புரையாற்றினர்.

தமிழீழத்தின் வரலாற்றுத் தொன்மையை எடுத்துக்காட்டும் வகையில் தொல்பொருட்களைப் பாதுகாத்தல், அரும்பொருட்களைப் பாதுகாத்தல், போர்க்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் இப்பணியகத்தின் நோக்கமாகும்.

(இ)

# தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்டக் குழுத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட தெரிவுக்குழுக் கூட் டம் நேற்றுக்காலை யாழ் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி தலைமையில் இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள நல்லூர், தீவகம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சிக் கோட்டங்களிலிருந்து 100 ற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இத் தெரிவுக் குழுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளராக நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த சொலமன் ஆ. சிறில் துணைச் செயலாளராக தென்மராட்சிக் கோட்டத்தைச் சேர்ந்த க.சந்திரசேகரம் பொருளாளராக வலிகாமம் கோட்டத்தைச் சேர்ந்த த.முகுந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்ட்டுள்ள அதேவேளை பிரதேசதுறை சார்ந்த பிரதிநிதிகளாக 25 பேரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனா்.

(உ-18)


**DEPARTMENT OF HEALTH SERVICES**

**TEACHING HOSPITAL, JAFFNA**

**CONSTRUCTION OF STAIRCASE OF DRUE STORES AUDITORIUM**

1. Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Construction of staircase of Drug stores Auditorium will be closed at 10:00 A.M.on 23.08.2003.

   Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna up to 16.08.2003 on payment of a non-refundable fee of Rs: 250/-
2. Tenders will be opened immediately after the closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.
3. Tenders Froms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).
4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna, or deposited


## ஜே.வி.பி. சு.க. கூட்டுக்கு அனுரா உயிரையும் கொடுப்பாராம்




### வவு. கைக்குண்டுத் தாக்குதல்

# இரசாயனப் பகுப்பாய்வுக்கு மாவட்ட நீதிபதி உத்தரவு

(வவுனியா)

வவுனியாவிலுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலினை அடுத்து, மீட்கப்பட்ட பொருட்களின் எச்சங்களை, இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்துமாறு, வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் வவுனியாப் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் 28ந் திகதி வவுனியாவிலுள்ள புலிகளின் அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.

இத் தாக்குதலையடுத்து மீட்கப்பட்ட பொருட்களை கொழும்பிலுள்ள இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி, இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட படுத்துமாறும் தாக்குதல் சந்தேக நபர்களை விரைவாக கைது செய்யுமாறும் பொலிசாருக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

(இ)

## கொடுப்பனவு வவுச்சர் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்க

## 1500 விகாரைகள்...

பிக்கப்பட்ட துண்டுப் பிரசுர விநியோகம் நாட்டிலுள்ள 1500 விகாரைகள் மூலம் 56 நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபை எதிர்தது ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் மற்றும் 70க்கும் மேற்பட்ட

## ஆசிரியரின்...

செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கல்வி நிருவாக சேவையினரின் அதிகுறைந்த மாதச் சம்பளம் 12 ஆயிரத்து 820 ரூபாவாகவும் அதிகூடிய மாதச் சம்பளம் 32 ஆயிரத்து 250 ரூபாவாகவும் இருக்க வேண்டுமெனவும் அவ் அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

(உ-18)

## மருத்துவக்...

சரத் என் சில்வா தலைமையிலான மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு இம் மாணவர்களை மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்குமாறும் மாணவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா நட்ட ஈடாக வழங்க வேண்டும் எனவும் பல்கலைக் கழக மானிய ஆணைக் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது.

(இ-5)

போராட்டத்தை நாடு தழுவிய ரீதியில் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்க் கட்சியினதும் பொது அமைப்புக்களினதும் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து தலை நகர் கொழும்பு உட்பட

3. Tenders Froms will be issued only to Contractors having valid registration in Grade M8 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).

4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna, or deposited in the Tender Box kept at the address appearing below, to receive before the closing time.

5. Tender Documents may be inspected free of charge at the Resident Engineer's office, CECB, Teaching Hospital, Jaffna.

6. For futher details please contact A.O.G.H.Jaffna.

Dr.S.Sathurmugam,
Chairman,
Divisional Tender Board,
Teaching Hospital,
Jaffna.

(C\6552)

## கொடுப்பனவு வவுச்சர் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா நிப்பொன் கல்வி கலாசார நிலையத்தினால் யாழ். மாவட்ட பாடசாலைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களிற்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் பணக் கொடுப்பனவின் ஜூன், ஜூலை மாதக் கொடுப்பனவுகள் இன்றிலிருந்து யாழ். மத்திய கல்லூரியிலுள்ள யாழ்ப்பாண நிலையம் 101ல் வைத்து வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவுக்கான வவுச்சரை பாடசாலை அதிபர்களோ அல்லது பொறுப்பாசிரியர்களோ காலதாமதமின்றி பெற்றுக் கொள்ளுமாறு யாழ். நிலைய இணைப்பாளரும் யாழ். மத்திய கல்லூரியின் அதிபருமான கே.இராசதுரை கேட்டுள்ளார். (இ-5)

யோகம் நாட்டிலுள்ள 1500 விகாரைகள் மூலம் 56 நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபை எதிர்தது ஜே.வி.பி உள்ளிட்ட எதிர்க் கட்சிகளும் மற்றும் 70க்கும் மேற்பட்ட பொது அமைப்புக்களும் 9-ம திகதி சனிக்கிழமை முதல் 16ம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டத்தை நாடு தழுவியரீதியில் நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்க் கட்சியினதும் பொது அமைப்புக்களினதும் எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ந்து தலை நகர் கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (மு)

ஆணைக் குழுவுக்கு உத்தரவிட்டுள்ளது. (இ-5)


## பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

சொந்தமாக, நல்ல நிலையில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் 09.08.2003 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.

## நன்றியும் பாராட்டுக்களும்

முள்ளந்தண்டுச்சில்லு (Disc) விலகியமையினால் எழுந்து நிமிர முடியாமல் நரம்பு நோய்வாய்ப்பட்டிருந்த எனக்கு மிகச்சிறந்த முறையில் பாரிய சத்திர சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றி என்னை பூரண சுகப்படுத்திய

வைத்திய கலாநிதி நரம்பியல் நிபுணர்

**Dr. V. குணாநந்தம் அவர்களுக்கும்**

(MBBS, FRCS, ED, FRCS, SN, phD, London)

வைத்திய உதவியாளர்கள் தாதிமார்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கனடாவில் 3 மாதமாக சிகிச்சை பெற்ற போதும், குணமடையாததால், லண்டனிலுள்ள வைத்திய நிபுணர் மூலம் நரம்பியல் நிபுணர் Prof. V. குணாநந்தம் அவர்களின் திறமையை கேள்வியுற்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்று பூரண சுகம் அடைந்துள்ளேன்.

Toronto, Canada.

வி.சங்கர்

குறிப்பு:- என்னைப்போல் நரம்பியல் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் செவ்வாய்க்கிழமையிலும் ஏனைய நாட்களில் சம்பந்தர் கிளினிக்கிலும் Dr.V.குணாநந்தம் அவர்களைச் சந்தித்து கட்டணம் இன்றி சிகிச்சை பெற்றுப் பயன் பெறுவீர்களாக.

(7409)


## 5ம் தர புலமைப் பரட்சை வினாத்தாள் - 28

மாணவர்முழுப்பெயர்:.................................................

பாடசாலையின்பெயர்:.................................................

வீட்டின்முகவரி:.................................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 13.08.2003 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

குறிப்பு:-மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத் தாள்களை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாக குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15,வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.